27TH
OCTOBER
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 91 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## அயர்லாந்து ஜனாதிபதி தேர்தலில் பலஸ்தீன் ஆதரவு கட்சி வெற்றி!

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற அயர்லாந்து ஜனாதிபதி தேர்தலில் பலஸ்தீன் ஆதரவு இடதுசாரி கட்சி அபேட்சகர் கதரின் கொனோலி வெற்றியீட்டியுள்ளார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இவரது வயது 68.

02ம் பக்கம்பார்க்க...

# இஸ்லாமிய நூல்களை பரிசீலித்து அங்கீகாரம் வழங்கும் குழுவை கலைக்கவும்

### 22 முஸ்லிம் எம்.பீ.க்கள் அரசுக்குக் கடிதம்!

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு தருவிக்கப்படும் அல்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நூல்களை பரிசீலித்து அங்கீகாரம் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவை உடனடியாக கலைக்குமாறு 23 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தை கேட்டுள்ளனர். இப்போது சவுதி அரேபியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள அல்குர்ஆன் பிரதிகளை விடுவிப்பது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் புத்த சாசன சமய கலாச்சார அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

03ம் பக்கம்பார்க்க...

## அரசாங்கத்துக்கு எதிராக களமிறங்கும் எதிர்க்கட்சிகள்

### நவம்பர் 21 முதல் நாடெங்கும் பேரணி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் பிற கட்சிகளை உள்ளடக்கிய கூட்டு எதிர்க்கட்சி, நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் இருந்து தொடங்கும் கூட்டுப் பிரச்சாரத்தை இன்று அறிவித்துள்ளது. அங்கு ஒரு மாபெரும் பேரணி நடத்தப்பட உள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லருக்கு எதிராக ஒன்றுபட்ட நட்பு நாடுகளைப் பின்பற்றுவதாகக் கட்சிகள் அறிவித்தன.

02ம் பக்கம்பார்க்க...

### வெலிகம லஸந்தவின் கொலைக்கு 1.5 மில்லியன் ஒப்பந்தம்

## கைதாகிய துப்பாக்கிதாரி வெளியிடும் திடுக்கிடும் தகவல்கள்

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலை, டுபாயிலிருந்து பெறப்பட்ட 1.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தத்திற்காக நடந்தது என்றும், கொலைக்கு முன்னர் அந்தப் பணம் கொலையாளிக்கு ரொக்கமாக வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் விசாரணைகள் தற்போது

03ம் பக்கம்பார்க்க...

## வெளிநாட்டில் பணிபுரிவோருக்கும் வாக்களிக்க ஏற்பாடு

### அமைச்சர் விஜித ஹேரத்



எதிர்காலத்தில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்குரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் கீழ் ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்றுவருவதாக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## ரணில் - சஜித் விரைவில் சந்திப்பு

### இணைப்புப் பேச்சுக்களும் தீவிரம்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாக தகவல்கள்

02ம் பக்கம்பார்க்க...

## மத கலாச்சாரங்களுக்கு ஏற்ப தாதியர் சீருடையை மாற்ற முடியாது

### மீறினால் தடுத்து நிறுத்துவோம்

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை



(அஷ்ரப் ஏ சமத்)

இந்த நாட்டில் சர்வதேச தரத்தில் தாதியர்களுக்கு என்ற ஓர் சீருடை இருந்து வந்தது. அதை யாரும் அவரவர் மதம் கலாச்சாரத்திற்கும் ஏற்ப மாற்ற நினைப்பார்கள் ஆனால் அதற்கு எதிராக எங்களது பொது அரச தாதியர்கள் ஊழியர் சங்கம் தடுத்து நிறுத்தும்.

அதற்கு எதிராக நாங்கள் ஊழியர் சங்கத்தின் நடவடிக்கையில்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி
Amãna Bank

## வெளிநாட்டில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 40வது வருட நிறைவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை (27) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் வாக்களிக்க தேவையான வசதிகளை வழங்கவும், தேவையான சட்ட நிலைமைகளை உருவாக்கவும் பொது நிர்வாக அமைச்சு ஏற்கனவே விசேட குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும் பங்களிப்பு ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் இதன்போது வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## மத...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இறங்கும் என பொதுச் சேவை தாதியர்கள் சங்கத்தின் தலைவர் முத்தட்டுவே ஆனந்த தோரோ இன்று 26 ஆம் திகதி அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் வழமையாக இருந்து வரும் தாதியர்கள் சீருடையை அவரவர் மதம் கலாச்சாரத்திற்கேற்ப அணியலாம் என ஊடகங்களில் வெளிவந்த செய்தியை கவனித்தேன்.... ஆனால் தற்பொழுது சுகாதார அமைச்சர் திறம்பட எடுத்துச் செல்லும் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ச இதற்கு உடன்படமாட்டார் என நினைக்கின்றேன்.

முன்னாள் அமைச்சர் கலாம் சென்ற எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கூட பாராளுமன்றத்தில் முஸ்லிம்கள் கலாச்சார ஆடை அணிவதற்கு ஏற்ப தாதியர்களின் சீறுடையை மாற்றும் படி அப்போது இருந்த சுகாதார அமைச்சர் ரேணுகா கேரத்திடம் கோரிக்கை விடுத்தார் அப்போது சுகாதார அமைச்சர் இவ்வாறு செய்ய முடியாது...என்று சொல்லியிருந்தார்.

ஆகவே தான் சுகாதார அமைச்சர் இந்த தாதியர்கள் அணியும் சீருடையை ஓர் குறிப்பிட்ட இனத்தவர்களுக்கு கலாச்சாரத்துக்கு ஏற்ப மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க மாட்டார் என நம்புகின்றோம் இவ்வாறு அவர் நடவடிக்கை எடுப்பின் எங்கள் ஊழியர்கள் சங்கம் இதற்கு எதிராக வேலை நிறுத்தம் ஈடுபடுவோம்.

அவ்வாறு முஸ்லிம் தாதியர்கள் நமது கலாச்சாரத்திற்கும் ஏற்ப உடை அணிய வேண்டும் என்றால் அவர்கள் அத்தொழிலில் இருந்து விலகிச் செல்ல முடியும் எனவும் முத்துட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

மேற்படி விடயம் கடந்த 24ஆம் திகதி மாதாந்தம் முஸ்லிம்களது பிரச்சினைகள்,மதம், கல்வி கலாச்சார விஷயம் கலந்துரையாடுவதற்கு ஒவ்வொரு மாதமும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் வெளிநாட்டு அமைச்சர் தலைமையில் வெளிநாட்டு அமைச்சின் கூடி கலந்துரையாடுவார்கள்.

அவ்வப்போது முஸ்லிம்கள் சம்பந்தமான அவ்வப்போது எழும் பிரச்சினைகள் முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் அமைச்சல் விஜித் ஹேரத்திடம் முன் வைத்தனர் இதில் மூதூர் வைத்தியசாலை ,தாதியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் , மற்றும் திறந்த பல்கலைக்கழக தாதிய பயிற்சி நெறிகள் பயிலும் முஸ்லிம் பெண்கள் சீருடையில் அணிவதில் எதிர்கொள்ளும் பிரச்சினை அமைச்சரிடம் முன் வைக்கப்பட்டது.

அச் சமயம் அமைச்சர் முஸ்லிம் பெண்கள் தத்தமது கலாச்சாரத்தில் கேற்ப உடை அணிந்து கொள்ள முடியும். அதில் தாதியர்கள் சீருடையில் அவர்களது கலாச்சாரத்திறகு அணிய எவ்வித தடையும் விதிக்கவில்லை எனச் சொல்லி இருந்தது குறிப்பிடத்தக்கது.

## ரணில் - ...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வெளியாகியுள்ளன.

இரு தரப்பு இணைவுக்காக இரு கட்சிகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் உள்ளவர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து பயணிப்பதற்குரிய இணக்கப்பாட்டை இரு தரப்புகளும் எட்டிய பின்னர், இரு கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வைப்பதற்குரிய முயற்சியே இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இருவரும் இணைந்து கூட்டு செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எவ்வாறாயினும் இரு கட்சிகளும் ஒரு கட்சியாக இணைவதற்கு இரு தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

எனவே, பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து, பொதுச் சின்னத்தில் பொதுப் பட்டியலின் கீழ் தேர்தல்களைச் சந்திப்பது பற்றி தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரசாங்கத்துக்கு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நாடு முழுவதும் தொடர் பேரணிகளை நடத்துவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

அரசியல் வட்டாரங்களின் தகவல் படி, ஐக்கிய தேசியக் கட்சி, சமாகி ஜன பலவேகய, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட 30 இற்கும் மேற்பட்ட எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் "மக்களின் குரல் (People's Voice)" பேரணியில் கலந்துகொள்ளவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒரே மேடையில் கொண்டுவருவதே இந்தப் பேரணியின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிகழ்வின் அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளிடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அயர்லாந்து...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொனோடி அயர்லாந்தின் கோல் கட்சி அபேட்சகரைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

45 தேர்தல் தொகுதிகளில் இந்த வாக்குப் பதிவு இடம்பெற்றிருக்கிறது.

# நீர்கொழும்பு ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் உவைஸ் காலமானார்



நீர்கொழும்பு பலகத்துறை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் அல்ஹாஜ் எம். சி.எம். உவைஸ் தனது 89 வது வயதில் காலமானார்.

கல்வித் துறையில் அளப்பரிய பங்காற்றியுள்ள மர்ஹூம் உவைஸ் 1959 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியர் , அதிபர் பதவிகளை வகித்தார், 31 ஆண்டு கால கல்விச் சேவை பின் ஓய்வு பெற்றார். மார்த்தாண்டியா, கொற்றாமு லையை புறப்படமாகக் கொண்ட இவர் ஓய்வு பெரும் போது கொழும்பு தாருஸ்ஸலாம் மகா வித்தியாலத்தில் அதிபராக பணிபுரிந்தார் .

கல்வித்துறைக்கு மேலதிகமாக, பிரதேசத்தில் ஆத்மீக வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்புச் செய்து வந்த இவர் இவருடைய ஊரான பொற்றாமுலையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பள்ளிவாசலை நிர்மாணிப்பதில் இவரது பங்கு முக்கியமானது.

பலகத்துறை கொரற்றாமுல்லையில் பள்ளிவாசல் உதவியாக செயற்பட்ட இவர், மூன்று பிள்ளைகளைகளின் தந்தையாவார்.

இவரது மூத்த மகள் நீர்கொழும்பு அல்கிதா மத்திய கல்லூரியில் முன்னாள் அதிபர் மர்ஹூம் ஹூஸ்னி ஷராஃபா ஆவார்.

மற்றொரு மகள் ஷஹீதா நஸ்ரின் ஆசிரியராக பணிபுரிகிறார். இவரது மற்றுமொரு மகள் ஷஹீத அரசின் ஆசிரியராக பணிபுரிகிறார்.

சிலாபம் நகர சபை முன்னாள் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான சாதிகுள்ளமீனின் மாமனாரும் ஆவார்.

இவருடைய ஜனாஸா கடந்த வியாழக்கிழமை பலகத்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.


# சட்டத்தரணி வன்னிநாயக தாக்குதலோடு தொடர்புடைய பொலிஸ் கான்ஸ்டபிள் முஸ்லிம் தாய்க்குப் பிறந்தவர்

அண்மையில் கைது செய்யப்பட்ட கல்கிஸ்ஸ நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி வணி நாயக்க தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் தரிந்த தில்கார அவரது கிராமத்தில் இருக்கும் ஒரே அரசாங்க ஊழியர் என்ற செய்தி வெளியாகியுள்ளது. கண்டி உடிஸ்பத்துவ பிரதேசத்துக்கு அருகில் உள்ள மதமனாவ என்ற கிராமத்தை சேர்ந்த முதலாவது அரசாங்க ஊழியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தரிந்தவின் குடும்பம் இன்னும் குடிசையிலே வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வீடு இப்போது படிப்படியாக திருத்தி புனரமைக்கப்படுகிறது. தெல்தெரிய நகரில் இருந்து ஒன்றரை மணி நேரத் தூரம் பயணம் செய்வதன் மூலம் மதமனாவ கிராமத்தை சென்றடைய முடியும். மதமனாவ கிராமத்தில் 13 குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர். தரிந்தவை தவிர்த்து ஏனையவர்கள் ரங்கல்ல தோட்டத்தில் தொழிலாளர்களாக பணிபுரிகின்றனர். தரிந்தவின் குடும்பத்தில் ஐந்து பேர் உள்ளனர். தரிந்தவின் தந்தை தச்சுத் தொழிலாளி மற்றும் தாய் சித்தி ரிபாஸா தனியார் கைத்தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

தரிந்தவின் வீடு அரைகுறையாக கட்டுமானம் செய்யப்பட்டதொரு வீடாகும். தற்போது வீட்டை சிறிது சிறிதாக திருத்தும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. தரிந்தவின் பிரபல்யத்தின் மூலம் கிராமத்திற்கு சுபீட்சம் கிடைக்க கூடும் என கிராமவாசிகள் மகிழ்ச்சி தெரிவிப்பதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கின்றனர்.

குறைந்தபட்சம் கரடு முரடாக உள்ள கிராமத்தின் பாதைகளாவது சீர் செய்து தருவதில், உரிய அதிகாரிகள் கரிசனை காட்ட வேண்டும் என கிராமவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



**வெலிகம...**
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தியுள்ளன.

மஹரகம, நாவின்னவில் நேற்று (26) மாலை லசந்தவைக் கொன்ற துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கைது செய்யப்பட்டதன் மூலம், தொடர்புடைய அனைத்து தகவல்களும் புலனாய்வுக் குழுக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிதிகம ருவன் மற்றும் சுட்டியின் நெருங்கிய கூட்டாளி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு கொலை ஒப்பந்தத்தை வழங்கியதாகவும், லசந்த கொலை செய்யப்படுவதற்கு முன்பு அவர்களது கூட்டாளிகளில் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு 1.5 மில்லியன் ரூபாயை ஒப்படைத்ததாகவும் தற்போது தெரியவந்துள்ளது.

பிரதேச சபைத் தலைவரை சுட்டுக் கொன்ற துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் நேற்று (26) கெக்கிராவையில் இருந்து கொழும்புக்கு வந்து, புறக்கோட்டையில் பல மணி நேரம் அலைந்து, ஐஸ் போதைப்பொருளைத் தேடிச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

புறக்கோட்டையில் "ஐஸ்" கிடைக்காதபோது, அதைத் தேடி பொரளை மற்றும் தெமட்டகொட பகுதிகளிலும் அலைந்து திரிந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஐஸ் கிடைக்காததால் ஏமாற்றமடைந்த துப்பாக்கிச் சூடு நடத்தியவர், கோட்டைக்குத் திரும்பி, ஹைலெவல் சாலையில் கொட்டாவ செல்லும் பேருந்தில் ஏறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவையில் உள்ள மகும்புரவிலிருந்து மாத்தறை நோக்கி பயணிக்கும் பேருந்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் ஏற திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் டுபாயில் இருந்து தெற்கு நோக்கிச் செல்ல வேண்டாம் என்று அவருக்கு வழிகாட்டிய ஒப்பந்ததாரர் உத்தரவு வழங்கியதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி, நேற்று (26) மதியம் கொட்டாவயிலிருந்து பேருந்தில் மஹரகமவுக்கு வந்த அவர், மஹரகமவில் பல மணி நேரம் சுற்றித் திரிந்ததாகக் கூறப்படுகிறது.

டுபாயில் இருந்து வந்த அறிவுறுத்தலின்படி, லசந்த கொலை செய்யப்படுவதற்கு முன்பு, முதல் பயன்படுத்தி வந்த தொலைபேசிக்கு பதிலாக புதிய தொலைபேசியை வாங்க நாவின்னவில் உள்ள ஒரு கடைக்குச் சென்றதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தொலைபேசி கடையை விட்டு வெளியேறும்போது, தனது கடமைகளை முடித்துக்கொண்டு பேருந்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு உளவுத்துறை அதிகாரியால் அடையாளம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும், அந்த அதிகாரி உடனடியாக பேருந்தில் இருந்து இறங்கி சந்தேக நபரை துரத்திச் சென்றதாகவும், சந்தேக நபர் அவரைப் பார்த்து ஓடத் தொடங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓடிப்போன நபர் ஒரு தொலைபேசி கடையில் இருந்து ஒரு தொலைபேசியைத் திருடிவிட்டதை உணர்ந்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், உளவுத்துறை அதிகாரியுடன் சேர்ந்து சந்தேக நபரைத் துரத்திச் சென்று பிடித்ததாக விசாரணைக் குழு தகவல் வெளியிட்டுள்ளது.

லசந்தவைக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் இராணுவத்தில் இருந்தவர் என்பது தெரியவரவில்லை என்றும், அவர் ஆரம்பக் கல்வியை மட்டுமே பெற்றுள்ளார் என்பது புலனாய்வுப் பிரிவுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலைக்குப் பிறகு, துப்பாக்கிச் சூடு நடத்தியவரும் மோட்டார் சைக்கிளில் வந்தவரும் வெலிகமவிலிருந்து ஒரே மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்ததாகவும், ஆனால் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் வழியில் வேறொரு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும் சிசிடிவி ஆதாரங்கள் முன்னர் வெளிப்படுத்தியிருந்தன.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தனது மனைவியை தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்ததாக விசாரணைப் பிரிவுகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த வழியில் வெல்லவாய மஹியங்கனையைக் கடந்து அவர்கள் கெகிராவையை அடைந்துள்ளதாக இப்போது தெரியவந்துள்ளது. லசந்தவைக் கொலை செய்வதற்காக மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், செல்லும் வழியில், மஹியங்கனைக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் தனது மோட்டார் சைக்கிளை மறைத்து வைத்திருந்ததாகவும், அவர்கள் மூவரும் துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் மோட்டார் சைக்கிளில் கெக்கிராவையை அடைந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கூடுதலாக, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கொலை ஒப்பந்தமாகப் பெற்ற 1.5 மில்லியன் ரூபாயில் 1.2 மில்லியன் ரூபாயை துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் மனைவியிடம் இருந்து விசாரணைக் குழுக்கள் கண்டுபிடித்துள்ளன.

இந்தக் கொலை தொடர்பான விசாரணை, பொலிஸ்மா அதிபரின் முழு மேற்பார்வையின் கீழ் நடத்தப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரும் மற்ற சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பிரிவினால் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இஸ்லாமிய...**
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்குர்ஆன் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நூல்களை பரிசீலிப்பதற்காக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் குழு ஒன்றை நியமித்திருந்தது.

இந்தக் குழு தற்போது சவுதி அரேபியாவில் இருந்து கொண்டுவரப் பட்டிருக்கின்ற குர்ஆன் பிரதிகள் தொடர்பாக முழுமையான சிபாரிசை செய்யாததன் காரணமாக இன்று பல வருட காலமாக குர்ஆன் பிரதிகள் சுங்கத் திணைகளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உடைய முயற்சியால் அரச மற்றும் எதிர்க்கட்சி தரப்பு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 23 பேரின் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று புத்த சாசன கலாச்சார சமய விவகார அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்திலேயே உடனடியாக தற்போது செயல்படுத்தப்படும் குழுவை கலைத்து புதிய குழு ஒன்றை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போதைய குழுவில் 7 பேர் அங்கம் வைத்துள்ளதோடு இவர்களில் இருவர் குர்ஆன் பிரதிகளை வெளியிடுவது தொடர்பாக மாற்றுக் கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இதனால் குர்ஆன் பிரதிகளை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதே நேரம் 7 பேர் கொண்ட இந்த குழுவில் 5 பேர் அகில இலங்கை ஜம்மியத்தில் உலமாவின் செயற்குழு அங்கத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 OCTOBER 27 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஹஜ் சட்ட மூலத்தை உருவாக்க சகலரும் பங்களிக்க வேண்டும்

ஹஜ் விவகாரங்களை கையாளுவதற்காக சட்டமொன்று இல்லாமை நீண்ட காலமாக இருந்து வரும் குறைபாடாகும். ஹஜ் ஏற்பாடுகளில் சிக்கல்கள் உருவாகுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு ஹஜ் சட்டமூலம் ஒன்றை அமுலுக்கு கொண்டு வருவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக புத்த சாசன சமய கலாச்சார அமைச்சர் கலாநிதி ஹிரிதும செனவி தெரிவித்துள்ளார். ஹஜ் சட்டமூலமானது அமைச்சரின் ஆலோசனையின் பேரில் செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்த துறை சார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு சமர்ப்பித்திருந்த சிபாரிசுகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக முஸ்லிம் சமூகம் வேண்டி வந்த சட்டமூலத்தை தயாரித்து சட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சர் ஹிரிதும செனவி அளித்து வரும் தலைமைத்துவம் பாராட்டத்தக்கது. நாட்டின் அரசியலமைப்பு சட்டத்திற்கேட்ப இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட உள்ளது. இதற்கு முன்பும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் பதவிகளை வகித்த பலரும் இவ்வாறான சட்டமொன்றை உருவாக்குவது பற்றி அறிவித்துக் கொண்டிருந்த போதும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. இந்தப் பின்னணியில் சட்டமூலத்தை விரைவில் வரைவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. இச்சட்ட மூலம் வெளியிடப்பட்ட பின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினரதும் கருத்துக்கள் பெறப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். சமூகம் சார்பில் ஒருமித்த கருத்துக்களை முன்வைப்பதற்கு இத்துறை சார் நலன் விரும்பிகள் அக்கறை காட்ட வேண்டும்.

இதேநேரம் ஹஜ் உம்ரா ஏற்பாடுகள் தொடர்பாக இரு குழுக்கள் இயங்கி வருகின்றன. ஹஜ் முகவர்களை உள்ளடக்கிய இக்குழுக்கள் ஒன்றுபட்டு செயல்படுவது காலத்தின் தேவையாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அண்மையில் இரு குழுக்களதும் வருடாந்த கூட்டங்களில் புதிய உத்தியோகத்தர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த இரு குழுக்களும் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலம் இத்துறையின் வளர்ச்சிக்கு நிறைந்த பங்களிப்பினை செய்ய முடியும் என்பதே எமது கருத்தாகும்.

ஹஜ் யாத்திரிகர்களுக்கான கட்டணங்களின் அதிகரிப்பானது சாதாரண மக்களது ஹஜ் கனவினை சிதறடிக்கச் செய்துள்ளது. இன்று பெரு வசதியுள்ளவர்களுக்கு மட்டுமே ஹஜ் செய்து கொள்ள முடியும் என்ற நிலை உருவாகி வருகின்றது. இந்த நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஹஜ் உம்ரா யாத்திரிகை அமைப்புகளுக்கு மகத்தான பொறுப்பு உள்ளது. இவ் அமைப்புகள் ஒற்றுமையாக செயல்பட்டு இந்த இலக்கினை அடைய வேண்டும். இல்லாவிடில்

ஹஜ் என்பது வெறும் பணக்காரர்களின் ஒரு வணக்க வழிபாடுகளாக மட்டுப்படுத்தப்பட்டுவிடும். இதுகுறித்து சமய விவகார அமைச்சு, முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம், ஹஜ் முகவர்கள் சங்கம் போன்ற அமைப்புகள் சிந்தித்து ஹஜ் கடமையை நிறைவேற்ற ஏங்கி நிற்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு ஹஜ்ஜை நிறைவேற்ற பயண ஏற்பாட்டுப் பொதி ஒன்றை அறிமுகப்படுத்த ஆலோசிக்க வேண்டும்.

# மு.கா.தலைவர் ஹக்கீம் குழுவினர் ஜெய்லானி பள்ளிக்கு விஜயம்



(கே.எ. ஹமீட்)

பலாங்கொடை - ஜெய்லானி ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் அழைப்பின் பேரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில்ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நிசாம் காரியப்பர்(ஊ), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். உதுமாலெப்பை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாஸித், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளருமாகிய எஸ்.எம்.எம். முஷர்ரப் முதுநபீன், கட்சியின் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன் ஆகியோர் விஜயம் செய்தனர்.

பலாங்கொடை - ஜெயிலானி ஜு/ம்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் சார்பில் தலைவர் அல்ஹாபிழ் மௌலவி அப்துல்லாஹ் அவர்களும் , செயலாளர் சிராஸ் சம்சுதீன், உபதலைவர் சிராஜ் நஜாஹி, சல்மான் நஜாஹி மற்றும் உலமாக்களும் , பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முபிஸால் அபுபக்கர் , தொழிலதிபர் கபூல் ஆஸாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பலாங்கொடை ஜெய்லானி ஜும்ஆ பள்ளிவாசல் தொடர்பான குறைபாடுகள் மற்றும் முஸ்லிம்களின் பாரம்பரியங்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk



# ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தின் ஹிப்ழ் புதிய மாணவர் வரவேற்பு - 2025





(பீ.எம். முக்தார்)

சீனங்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தின் ஒரு பிரிவாக இயங்கும் பகுதி நேர ஹிப்ழ் மத்ரஸாவுக்கு 30 க்கும் மேற்பட்ட புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு அண்மையில் (20) பாஸிய்யா மண்டபத்தில் கலீபதுஷ் ஷாதுலி அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அபுல் ஹஸன் (நளீமி),

இந்த சீனங் கோட்டை ஊர் இலங்கையிலே தனித்துவமான ஊராகும். சீனங்கோட்டை பள்ளிச் சங்கம் 18 பள்ளிவாசல்கள் ஸ ாவியாக்களை நிர்வகிக்கிறது. ஷேக்மார்களின் துஆவினால் பொருளாதார வலம்பெற்ற ஊராகும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து கலாபீட அதிபர் மௌலவி அஸ்மிகான் (முஅய்யிதி) கருத்து தெரிவிக்கையில், 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது கலாபீடத்தின் ஒரு பிரிவாக பகுதி நேர ஹிப்ல் மத்ரஸா சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பல மாணவர்கள் அல் குர்ஆனை மனனமிட்டு வருவதோடு இவ்வருடம் 30 க்கும் மேற்பட்ட மாணவர்களை சேர்ப்பது அல்லாஹ்வின் அருளும் ஷேக்மார்களது உதவியுமாகும்.

திருக்குர்ஆனை மனனமிடுவதுமட்டுமல்லாமல் அதன் படி செயல்பட்டாலல் மாத்திரமே 10 பேரை சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல முடியும் என்ற நபிகளாரின் பொன் மொழியை மேற்கோள் காட்டி கூறினார்.

சீனங்கோட்டை பள்ளிச் சங்க உப தலைவர்களில் ஒருவரான றிழ்வான் (நளீமி), கூட்டுப் பொருளாளர் எம் எம் எம் ஹில்மி, உறுப்பினர் அல்ஹாஜ் தஹ்லான் மன்ஸூர், கலாபீட இணைச் செயலாளர்களான முஸ்னி உவைஸ், பர்ஸான் முர்ஸி, என பலரும் கலந்துகொண்டனர்.

# ஓட்டமாவடி ஹுதா பள்ளி வீதி வடிகான்கள் துப்பரவு

(முர்ஷித்)



கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட ஓட்டமாவடி ஹுதா பள்ளிவாயல் வீதியில் அமைந்துள்ள வடிகான்கள் குப்பை, கூழங்கள் மற்றும் கழிவுநீர் தேங்கி நின்ற நிலையில் ஓட்டமாவடி பிரதேச சபையின் உதவியுடன் துப்பரவுப்பணி முன்னெடுக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.மாஜிதா மற்றும் ஓட்டமாவடி சாஹிரா வித்தியாலய அதிபர் ஏ.எம்.ஜாபிர் கரீம் ஆகியோர் ஓட்டமாவடி பிரதேச சபைத்தவிசாளர் எம்.எச்.எம்.பைரூஸிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது, இப்பிரதேசத்திலுள்ள சாஹிரா வித்தியாலய மாணவர்கள் மற்றும் இப்பாதையூடாக வாழைச்சேனை நகருக்கு செல்வோர், இறைவழிபாட்டுக்கென செல்வோர் மற்றும் பிரதேச மக்களின் நன்மைகருதி பாடசாலைக்கு முன்னாலுள்ள வடிகான் மற்றும் /ஹுதா பள்ளிவாயல் வீதி என்பனவற்றில் துப்பரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது வேண்டுகோளையேற்று குறித்த பணியினை மேற்கொண்ட தவிசாளருக்கு பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.மாஜிதா, பாடசாலை அதிபர் ஏ.எம்.ஜாபிர் கரீம் மற்றும் பிரதேச மக்களும் நன்றி தெரிவிக்கின்றனர்.

# பேருவளை நகர சபைக்கு வருகை தந்த பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர்



(பீ.எம். முக்தார்)

இலங்கைக்கான ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பாட்ரிக் அக்டோபர் 16 ஆம் திகதி பேருவளை நகர சபைக்கு அதிகாரப்பூர்வமாக விஜயம் செய்தார்.

பேருவளை நகர பிதா மபாஸ ிம் அஸாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இவரின் வருகை, இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றுக்கிடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தியது.

எதிர்காலத்தில் நகர சபையுடன் இணைந்து சமூக முன்னேற்றம் மற்றும் நிலைத்த நகர வளர்ச்சிக்கான முயற்சிகளில் ஈடுபடுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இன்ஸாப் பாக்கிர் மாக்கார் மற்றும் நகர சபை உறுப்பினர்களான ஸெய்யிட் அஹமட், மல்லிகா ஜயந்தி ஸில்வா, எம்.என்.எம். இர்சாத், எம்.எப்.எம். இசாம் ஆகியோரு ம் இதன்போது கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# செய்தி வாசிப்புப் போட்டியில் ரிபாதா முதலாம் இடம்

(ஐ.ஏ. காதிர் கான்)

"சோசியல் டிவி" செய்தி வாசிப்பாளரும், இளம் கவிதாயினியும், இளம் மாணவியுமான பேருவளையைச் சேர்ந்த ரிபாதா ரிப்கான், "ஸ்கை லைன்" நிறுவனத்தின் அனுசரணையில் "அறிவு ஏந்தி ஊடகத்துறையை வளமாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட செய்தி வாசிப்புப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அண்மையில் இந்நிறுவனம் இவரது திறமையைப் பாராட்டி, குருநாகலில் அமைந்துள்ள வட மேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விருது வழங்கல் விழாவில், இவருக்கு விருது, நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் என்பனவற்றை வழங்கி பாராட்டி கௌரவித்தது.





இச்சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக எல்.என். மீடியா நெட்வோர்க் உரிமையாளர்கள், மகாராஜா - சக்தி மற்றும் சிரச ஊடகப் பிரதிநிதிகள், சர்வதேச மனித உரிமைகளின் உலகளாவிய பணிக்குழு உறுப்பினர் ஏ.டி.யூ. எம். பஸ்லான், டாக்டர் ருஷீனா ஜவாஹிர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

ரிபாதா ரிப்கான், பேருவளையைச் சேர்ந்த ரிப்கான் - பாத்திமா பிரோஸா தம்பதியினரின் புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மீன்பிடியை தடுப்பதற்காக கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 28 பேர் கைது





(எம்.எச்.எம்.சியாஜ்)

இலங்கை கடற்படையினர், யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையுடன் இணைந்து, கடந்த பதினைந்து நாட்களில் உள்ளூர் நீர்ப்பரப்புகளை உள்ளடக்கிய வகையில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட, இருபத்தெட்டு சந்தேக நபர்களுடன், எட்டு டிங்கி படகுகளை கைப்பற்றினர்.

அதன்படி, கிழக்கு கடற்படை கட்டளையால் திருகோணமலையில் உள்ள இறக்கண்டி, நல்லூர், பரவிடுபத, கொடிமுனை, நாயாறு, வெருகல்மொஹொட்டுவரம், சுதைக்குடா ஆகிய கடற்கரை மற்றும் கடல் பகுதிகளிலும், வடக்கு கடற்படை கட்டளையால் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை கடற்கரை மற்றும் கடல் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், யாழ்ப்பாண காவல்துறை சிறப்பு அதிரடிப் படையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. மீன்பிடி படகுகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த நடவடிக்கைகளில் பிடிபட்ட சந்தேக நபர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகுகள் திருகோணமலை, ஈச்சலம்பத்துவ, குச்சவெளி, கோட்பே, யாழ்ப்பாணம் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள மீன்வள அலுவலகங்களில் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

# இஸ்லாமிய தின நிகழ்வில் இரு மாணவர்களுக்கு கௌரவம்





(ஐ. ஏ. காதிர் கான்)

வெலம்பொட - சுப்பர் ஸ்டார் கழகம் அனுசரணையில், மஜ்லிஸ் ஏ. சூராஹ் அமீர் அல்ஹாஜ் ரியாஸ் உடையார் தலைமையில் அண்மையில் நடந்த இஸ்லாமிய தின நிகழ்வில், வெலம்பொட - "எவர் கிறீன்" சர்வதேச பாடசாலையின் மாணவன் அதீப் றிஸ்மி, அரபு எழுத்தணிப் போட்டியில் முதலாம் இடத்தையும், கிராஅத் போட்டியில் இரண்டாம் இடத்தையும், கஸீதா போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றதோடு மாணவி லம்ஹா ரஸ்வி, கிராஅத் போட்டியில் முதலாம் இடத்தையும், கஸீதா போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக கொண்டனர். இவருக்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தங்கத்திற்காக வடக்கு முஸ்லீம் மக்களை வெளியேற்றிய விடுதலைப்புலிகள்






(பாறுக் ஷிஹான்)

தங்கத்தின் பெறுமதியை அறிந்து ஆயுதங்களை வாங்குவதற்காக வடக்கு முஸ்லீம் மக்கள் ஆயுத முனையில் வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்ற ஒரு ஆய்வும் தற்போது வெளியாகியுள்ளதாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் அமைப்பு ஆய்வாளர் சட்டமாணி பி.எம் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.

கறுப்பு ஒக்டோபர் எனும் தொனிப்பொருளில் எக்ஸத் ஊடக வலையமைப்பு பணிப்பாளர் ஜே.எல்.எம் ஷாஜஹான் தலைமையில் நடைபெற்ற விடுதலைப் புலிகளால் வடக்கில் இருந்து இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி கோரும் நிகழ்வு காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன அஷ்-ஷஹீத் அஹமட் லெப்பை ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

1990 ஆண்டு எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும். இந்த காலகட்டத்தில் தான் விடுதலைப் புலிகள் தங்களது செயற்பாடுகளை உச்சாகமாக மேற்கொண்டு சென்ற காலம். அவர்கள் தங்களை வளர்த்துக்கொள்வதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்த காலம். 1987 ஆண்டு முதல் 1990 ஆண்டு வரை இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம். அதே நேரம் தங்களை மேலும் எவ்வாறு வளப்படுத்தலாம் என்று யோசனை செய்கின்றார்கள். அவ்வாறு யோசிக்கின்ற போது தற்போது உள்ளது போன்று 1990 ஆண்டு ஒக்டோபர் மாதம் உள்ள காலப்பகுதியில் தங்கத்திற்காக விலை அதிகமாக இருந்தது.

எனவே தங்கத்தின் ஊடாக தங்களது அமைப்பினை பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் எவ்வாறு தங்கத்தை மீட்டெடுத்தல் என்ற எண்ணத்தில் ஈடுபட்டார்கள். வட மாகாண முஸ்லீம்கள் விடுதலைப் புலிகளால் ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என்று பல ஆய்வுகள் நடைபெறுகின்றன. அதில் ஒன்று அன்று இருந்த தங்கத்தின் விலை காரணமாக தங்கத்தை சர்வதேசத்தின் ஊடாக கொண்டு சென்று அதனூடாக பணத்தை திரட்டி அதனூடாக ஆயுத கொள்வனவில் ஈடுபடலாம் என்ற ஒரு ஆய்வும் அவர்கள் மத்தியில் இருந்துள்ளது.

அந்த ஆய்வின் ஊடாக தான் வட மாகாண முஸ்லீம்களுக்கு தெரியும் என்று நினைக்கின்றேன். வடக்கில் யாழ்ப்பாணம் மன்னார் பகுதியில் காத்தான்குடி பிரதேசம் போன்று அதிகளவானவர்கள் வியாபாரிகள். அதாவது இவ்வாறான வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து அந்த தங்கங்களை எடுத்தால் ஆயுத கொள்வனவிற்காக பணம் திரட்டி கொள்ளலாம் என்று தான் அந்த வெளியேற்றம் நடைபெற்றதாக ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என பலரும் இன்றும் கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் இருக்கின்ற போது வருகின்ற ஒவ்வொரு அரசாங்கத்திடமும் வடக்கு மாகாண முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்ட விடயம் தொடர்பில் ஓர் ஆணைக்குழுவினை நியமித்து முக்கியமாக இவர்கள் ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என்பது தொடர்பான அறிக்கையினை செய்து தருமாறு கோரியிருந்தோம். ஆனால் இதுவரை அந்த ஆணைக்குழுவானது நியமிக்கப்படவில்லை. அவ்வாறான ஆய்வும் மேற்கொள்ளப்படவும் இல்லை. உண்மையில் அது வேதனைக்குரிய விடயம். நான் இன்றும் கூட மகஜர் ஒன்றினை எழுதி கொண்டு வந்திருக்கின்றேன்.

இந்த மகஜர் ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்காக ஆளுநர் ஊடாக அனுப்புவதற்கு எழுதப்பட்டுள்ளது. இந்த மகஜரில் அதே விடயத்தை மீண்டும் போட்டிருக்கின்றேன். சுமார் 35 வருடங்களுக்கு பிறகும் ஒரு விடயத்தை நாங்கள் தொடர்ந்தும் கேட்டுக்கொண்டு வருகின்றோம்.

எனவே, அந்த அடிப்படையில் வட மாகாண முஸ்லீம்கள் தங்கத்திற்காக அல்லது தங்கத்தை கொள்ளையடிப்பதற்காக வேண்டி வெளியேற்றப்பட்டார்கள். என்ற மிகவும் வேதனையான நிகழ்வு ஒன்று இருக்கின்றது. அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் 1990 ஆண்டு ஒக்டோபர் மாதம் என்பது அந்த பிரதேசத்தில் வியாபாரிகள் மீனவர்கள் விவசாயிகள் என சுமார் 75 ஆயிரம் முதல் 1 இலட்சம் பேர் வரை வெளியெற்றப்பட்டார்கள் என தெரிவித்தார்.

# உதுமாலெப்பைக்கு பாராட்டு




(இஸட்.ஏ.றஹ்மான்)

வை.எம்.எம்.ஏ யின் 75 ஆவது ஆண்டு விழா கடந்த 20 ஆம் திகதி கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் இடம் பெற்றது. இதன் போது வை.எம்.எம்.ஏ யில் 50 வருடங்கள் மற்றும் 40 வருடங்கள் சேவையாற்றிய அங்கத்தவர்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டது.

அந்த வகையில் 40 வருடங்களுக்கு மேலாக வை.எம். எம்.ஏ அமைப்பிலிருந்து சமூக சேவை செய்து வரும் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றை சேர்ந்த அமைப்பின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமர் சூரிய, கௌரவ அதிதியாக பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் தாம் ஆற்றிவரும் மகத்தான சேவைக்காக நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆலங்குடாவில் இடம்பெற்ற மத்ரஸா மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா





(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி ஆலங்குடா உலமாக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற அல் குர்ஆன் மத்ரஸ ா மாணவர்களுக்கிடையிலான போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) ஆலங்குடா பெரியபள்ளி மைதானத்தில் ஆலங்குடா உலமாக்கள் ஒன்றியத்தின் தலைவர் ரஸ்மில்கான் (ரஷீதி) தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கல்பிட்டி கிளையின் தலைவரும், கற்பிட்டி ரஹ்மானியா அரபுக் கல்லூரியின் அதிபருமான அஷ்ஷெய்க் முபாலில் (உஸமானி), சிறப்பு அதிதிகளாக புளிச்சாகுளம் ஷரபிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் நஸீர் (ஷரபி), அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் கிளையின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அப்துர் ரவூஃப் (காஸிமி), கற்பிட்டி மஜ்லிஸ ில் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிப்கான் (ரஹ்மானி),மற்றும் திகழி பாடசாலை அதிபர், ஆசிரியர், ஒன்றியத்தின் உறுப்பினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு போட்டியில் கலந்து கொண்ட 130 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் ஒவ்வொரு போட்டியிலும் முதல் ஐந்து இடங்களை பெற்ற 50 மாணவர்களுக்கு நினைவுச் சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு அல்குர்ஆன் மத்ரஸாவின் முஅல்லிம்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அஹதிய்யா பாடசாலைகளை இயங்கச் செய்ய அனைவரும் முன்வர வேண்டும்

## அதிபர் ஹலீம்தீன் வேண்டுகோள்

(உக்குவளை, ஜலீல்)

"அஹதிய்யா பாடசாலைகளின் பயனை பெற்றோரும் மாணவர்களும் உணர்வதாக இல்லை" என்று உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபர் எம்.எஸ். ஹலீம்தீன் கவலை தெரிவித்தார்.

அஹதிய்யா பாடசாலைகள் பற்றி கருத்துரை வழங்குகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இந்துக்களுக்கு அறநெறி பாடசாலை பௌத்தர்களுக்கு தஹம் பாசல கிறிஸ்தவர்களுக்கு மறைக்கல்வி எனும் பெயர்களில் அறநெறி பாடசாலைகள் அரச



அங்கீகாரத்துடன் நாட்டில் இயங்கி வருகின்றன ஞாயிறு தினங்களில் நடாத்தப்பட்டுவரும் இப்பாடசாலைகளில் மத விழுமியங்களைக் கொண்ட பாடங்கள் மூலமாக துறைசார் ஆசிரியர்களால் மாணவர்கள் நல்வழிப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் உக்குவளையில் எமது அஹதிய்யா பாடசாலை பல வருட காலங்களாக இயங்கிவருவதுடன் அரச பரீட்சைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடைநிலை பரீட்சை உயர்தரப் பரீட்சை மற்றும் தர்மாச்சாரிய ஆகிய பரீட்சைகளில் எமது மாணவிகள் சித்தியடைந்திருப்பது குறித்து எமக்கும் அவர்களது பெற்றோருக்கும் பெருமையாகும். மேலும் எமது பாடசாலைக்கு இதற்கு முன்னரும் சமீபத்திலும் அரச உதவிகளும் சமீபத்தில் கிடைத்துள்ளன அரச நிகழ்ச்சிகளிலும் எமது மாணவர்கள் பங்குற்றியமைக்காக சான்றுகளுடன் எமக்குக் கிடைத்துள்ளன.

இந்நிலையில் மாத்தளை மாவட்டத்தில் சில இடங்களில் அஹதிய்யா பாடசாலைகள் இயங்காத நிலையையும் அறிகிறோம். இதற்குக் காரணம் அத்தினங்களில் தனியார் வகுப்புகளுக்கு மாணவர்கள் முன்னுரிமை கொடுப்பது மட்டுமன்றி பெற்றோரும் மாணவர்களும் அஹதிய்யா பாடசாலைகளின் பயனை உணராதிருப்பதுமாகும்.

இதுவிடயத்தில் தனியார் வகுப்புகளை நடாத்துவோர் ஞாயிறு தினங்கள் மட்டும் மாணவர்கள் அறநெறி பாடசாலைகளுக்கு செல்வதற்கு வசதி செய்து கொடுப்பது நல்லது. இயங்காதுள்ள அஹதிய்யா பாடசாலைகளை இயங்கச் செய்ய புத்தி ஜீவிகள் சமூக ஆர்வலர்கள் முன்னவருவதும் இன்றைய காலத்தின் தேவையாகும் என தெரிவித்துக் கொண்டார்.

# கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா





கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் (GDUMA)ஏற்பாடு செய்திருந்த இவ்வருட வாசிப்பு மாத நிகழ்வுகளின் பரிசளிப்பு விழா கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை வத்தளை நகர சபை கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் எம் ஆர். மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரபல தொழிலதிபரும் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு தலை நகரிலும் வெளி மாவட்டங்களிலும் பல்வேறு உதவிகளை செய்து வருபவருமான ஸீனத் ட்ரேடிங் பிறைவேட் லிமிடெட் உறிமையாளர் அல் ஹாஜ் ஏ.எச்.எம். மாஹிர் பிரதம அதிதியாகவும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அல் ஹாஜ் எம் சீ ரஸூல் தீன் கொரவ அதிகமாகவும் கலந்து கலந்து கொண்டார். ஸூல் தீன் கொரவ அதிகமாகவும் கலந்து கொண்டிருந்தனர். விசேஷ அதிதிகளாக பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றிய ஒய்வு பெற்ற கலாநிதி பாச்சா ஹூஸைன்மியாஇ முன்னாள் ஈரான் நாட்டின் இலங்கைக் கான தூதுவரும் முன்னாள் கொழும்பு மாநார சபை மேயர் ஒமர் காமில் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இலக்கியமும் வாசிப்பின் முக்கியத் துவம் பற்றி கொழும்பு ஸாஹிரா பாடசாலை ஆசிரியை ஷஸ்னா நளீம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

சங்கத்தின் தலைவர் எம் ஆர். மொகிதீன் தலைமை உரையும் பொருளாளர் எம் கே. ஜூமாட் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் எஸ்.சி.பௌஸ்தீன் நன்றியுரையை வழங்கினார்.

சிங்கள தமிழ் மற்றும் அகதியா பாடசாலை மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டி கட்டுரை போட்டிகளில் சுமார் 150 மணவ மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர் என சங்கத்தின் இணைச் செயலாளர் ஏ.ஆர். எம்.முஸம்மில் தெரிவித்தார்.

இவர்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

அதிதிகளுக்கும் சங்கத்தினால் நினைவுச்சின்னம் வழங்கி கொள்விக்கப்பட்டதுடன் பிரதம அதிதிக்கு களுத்துறை மாவட்ட நலன்புரி சங்கத்தின் தலைவர் அல் ஹாஜ் ஜாபிர், மற்றும் அகில இலங்கை அஹதியா சம்மேளன செயளாலர் அல் ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர் ஆகியோரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்த போட்டி நிகழ்வுகளில் வத்தளை சென் ஆன்ஸ் பாலிகா மகா வித்தியாலயத்தில் 7ஆம் ஆண்டில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய எம்.நிக்கீசா என்ற மாணவி தமிழ் மொழி மூலம் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம்பெற்று நினைவுச் சின்னத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய இலக்கிய விழாவில் தேசிய மட்டத்திற்கு தெரிவானார் கல்பிட்டி யின் முஹம்மது ரிப்கான் செய்னா சுலைம்

**(அரபாத் பஹர்தீன்)**

இவ் ஆண்டுக்கான தேசிய இலக்கிய விழாவின் சிறுவர் பிரிவின் நாட்டார் பாடல் போட்டி நிகழ்ச்சியில் கல்பிட்டியைச் சேர்ந்த முஹம்மது ரிப்கான் செய்னா சுலைமிற்கு புத்தள மாவட்ட செயலக மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியமைக்காக கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற புத்தள மாவட்ட செயலக இலக்கிய விழாவின் விருது வழங்கள் நிகழ்வில் சான்றிதழும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடாத்தும் தேசிய இலக்கிய விழா -2025 போட்டி நிகழ்ச்சிகளில் கல்பிட்டியைச் சேர்ந்த முஹம்மது ரிப்கான் செய்னா சுலைம் சிறுவர் பிரிவின் நாட்டார் பாடல் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.

அதற்கமைய கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் பங்கேற்று முதலிடத்தினைப் பெற்று புத்தளம் மாவட்ட செயலகத்திற்குட்பட்ட போட்டிகளில் பங்கேற்று அதிலும் முதலிடத்தை தனதாக்கினார். மேலும் இவ்விரு முதலிடங்களுடன் எதிர்வரும் நாட்களில் கொழும்பில் இடம்பெறவுள்ள தேசிய மட்ட போட்டியிலும் பங்கேற்கவுள்ளார்.

அத்துடன் புத்தள மாவட்ட செயலகப் பிரிவில் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டமைக்காக நேற்று மஹாவெவ முத்ராதேவி கேட்போர் கூடத்தில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயான் ஜானக மற்றும் புத்தளம் மேலதிக மாவட்ட செயலாளர் புத்திகா எஸ். பண்டார தலைமையில் இடம்பெற்ற புத்தள மாவட்ட இலக்கிய விழா நிகழ்வின் பரிசளிப்பு வைபவத்தில் வைத்து சான்றிதழ் வழங்கப்பட்டது.



இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கதை கூறல் போட்டியில் அல் அக்ஸா பாடசாலை மாணவன் தேசிய மட்டத்திற்கு தெரிவு

**(அரபாத் பஹர்தீன்)**

இவ் ஆண்டுக்கான தேசிய இலக்கிய விழாவின் பாலர் பிரிவின் கதை கூறல் போட்டி நிகழ்ச்சியில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் மாணவனான பஸ்மில்கான் முஹம்மது அஹ்னாப் புத்தள மாவட்ட செயலக மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியமைக்காக கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற புத்தள மாவட்ட இலக்கிய விழாவின் விருது வழங்கள் நிகழ்வில் சான்றிதழும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

கலாச்சார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடாத்தும் தேசிய இலக்கிய விழா -2025 போட்டி நிகழ்ச்சிகளில் கல்பிட்டி அல் அக்ஸ ா தேசிய பாடசாலையில் தரம் 1இல் கல்வி பயிலும் பஸ்மில்கான் முஹம்மது அஹ்னாப் பாலர் பிரிவின் கதை கூறல் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.

அதற்கமைய கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் பங்கேற்று முதலிடத்தி னைப் பெற்று, புத்தளம் மாவட்ட செயலகத்திற்குற்பட்ட போட்டிக-



ளில் பங்கே-ற்று அதிலும் முதலிடத்தை தனதாக்கினார். மேலும் இவ்வ-ிரு முதல-ிடங்களுடன் எதிர்வரும் நாட்களில் கொழும்பில் இடம்பெற வுள்ள தேசிய மட்ட போட்டியிலும் பங்கேற்கவுள்ளார்.

அத்துடன் புத்தள மாவட்ட செயலகப் பிரிவில் “கிணற்றுக்குள் விழுந்த நரி” எனும் தலைப்பில் கதை கூறி முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டமைக்கான கடந்த 17ஆம் திகதி மஹாவெவ முத்ராதேவி கேட்போர் கூடத்தில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பி-னர் கயான் ஜானக மற்றும் புத்தளம் மேலதிக மாவட்ட செயலாளர் புத்-திகா எஸ்.பண்டார தலைமையில் இடம்பெற்ற புத்தள மாவட்ட இலக்க-ிய விழா நிகழ்வின் பரிசளிப்பு வைபவ-த்தில் வைத்து சான்றிதழும் பரிசில்க-ளும் வழங்கி வைக்கப்பட்டது.

# சீனன் கோட்டை வாலிபர் ஹழுரா ஜமஅத்தின் 5 தசாப்த கால பணிகளுக்கு பிரதி அமைச்சர் அர்கம் இல்யாஸ் பாராட்டு






**(பீ.எம் முக்தார்)**

பேருவளை சீனன் கோட்டை வாலிபர் ஹழுரா ஜெமாஅத் சீனன்கோட்டை பள்ளி சங்கத்தின் அனுசரனையுடன் வருடாந்தம் நடாத்தி வரும் சீனன் கோட்டை குர்ஆன் மத்ரஸாக்களுக் கிடையிலான சன்மார்க்க போட்டி களுடனான மீலாதுன் நபி விழாவில் பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா முதலாம் இடத்தையும், குட்டிமலை ஜலாலிய்யா குர்ஆன் மத்ரஸா இரண்டாம் இடத்தையும், அக்கரகொடை தாஜூல் மபாஹிரிய்யா குர்ஆன் மத்ரஸா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க இனைச் செயலாளரும் அகில இலங்கை ஜெம்ம-ியத்துல் உலமா சபையின் நிரைவேற்றுக் குழு உறுப்பினருமான கலீபதுஷ் ஷாதுலி அல்ஹாஜ் அஷ் ஷேஹ் இஹ்ஸானுதீன் அபுல் ஹஸ ன் (நளீமி) யின் வழிகாட்டலின் கீழ் 25.10.2025 சனிக்கிழமை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம் ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் அல் ஹாஜ் ஏ.எச்.எம் முக்தார் தலைமையில் நடைபெற்றது.

மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் எரிசக்தி பிரதி அமைச்சருமான அர்கம் இல்யாஸ் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாகவும் தேசபந்து டாக்டர் ரயீஸ் மீரா விஷேட அதிதியாகவும் கொழும்பு மஹ்மூதிய்யா அரபுக் கல்லூ ரி அதிபர் அல் உஸ்தாத் மௌலவி எம். எம்.அஸ்மீர் (ஹஸனி) சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டனர்.

வாலிபர் ஹழுரா ஜமாஅத் தலைவர் பஸீஹூர் ரஹ்மான் வரவேற்புரை நிகழ்த்தியதோடு செயலாளர் முஹம்மத் அஸ்மிர் நன்றியுரை நிகழ்த்தினார்.

கிராத் மனனம், கஸீதா, கஸீதா இறைதூ தர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றிய பேச்சு, தரீக்கா பற்றிய பேச்சு, கேள்வி-பதில், மணிமொழி, சாதுலிய்யா ஹழுரா பைத் உட்பட 30 வகையான சன்மார்க்க போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் சீனன் கோட்டை அல் /ஹமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, சீனன் கோட்டை ஆரம்பப் பாடசாலை ஊரில் உள்ள சர்வதேச பாடசாலை மற்றும் வெளியூர் பாடசாலைகளில் கல்வி கற்று தேசிய பரீட்சைகளில் சித்தியடைந்த சீனன் கோட்டையைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

கலீபதுஷ் ஷாதுலி அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ஹழுரா ஜமஅத் ஸ்தாபர் உறுப்பினர் அல் ஹாஜ் பர்ஸான் முர்ஸி ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்திக் குழு தலைவருமான சந்திய ஹெட்டியாரச்சி, மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அல் ஹாஜ் இப்திகார் ஜமீல், பேருவளை நகர பிதா மபாஸிம் அஸாஹிர், இலங்கையின் முன்னாள் பலஸ்தீன தூதுவர் அல் ஹாஜ் பௌஸான் அன்வர், சீனன் கோட்டை பள்ளிச்சங்க உபதலைவர் களான அஷ் ஷெய்க் எம்.எஸ்.எம் ரில்வான் (நளீமி), அல் ஹாஜ் முஸ்தாக் ஜாபிர் இணைச் செயலாளர்களான அல் ஹாஜ் எம்.எம்.எம் ஷிகாப், அரூஸ் அனஸ், இணைப்பொறுளாளர் அல் ஹாஜ் ஸப்வான் நைம் உறுப்பினர்களான அல் ஹாஜ் தஹ்லான் மன்ஸூர், அல் ஹாஜ் முஸ்னி உவைஸ், சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி), அதிபர் மௌலவி எம். அஸ்மிகான் (முஅய்யிதி), சீனன் கோட்டை குர்ஆன் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி எம்.டப்லியு.எம் பஹ்ஷரூத்தீன் (மிஸ்பாஹி), தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அரூஸ் அஸாத், தேசிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் ரம்ஸான் ஷிஹாப்தீன், நகர சபை உறுப்பினர் ஸைத் அஹ்மத், மொவ்லவி முஹம்மத் ஸஹ்ல் (அஸ்ஹரி), பேருவளை பொலீஸ் நிலை பொறுப்பதிகாரி எம். ஆர் நவரத்ன, முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியார் அஷ் ஷெய்க் முப்தி முர்ஸி (நளீமி), அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை உப அதிபர் நைஸர் தாஹா, கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவிகள் எம். ஸைனுல்ஆப்தீன் (பஹ்ஜி), எம்.ஐ.எம் பாஷரூக் (மக்கி) உட்பட கலீபாக்கள், உலமாக்கள், பெற்றோர்கள், பிரமுகர்கள், குர்ஆன் மத்ரஸா அதிபர்கள என பலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

சீனன் கோட்டை வாலிபர் ஹழுரா ஜமஅத்தின் 5 தசாப்த கால பணிகளை பிரதி அமைச்சர் அர்கம் இல்யாஸ் உட்பட அதிதிகள் இங்கு பாராட்டிப் பேசினர்.

# மாகாண சபைகளுக்கான தேர்தல்

# சட்ட ஏற்பாடுகள் நடந்தால் அடுத்த வருடம் தேர்தல்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

பிரதமர் ஹரினி அமரசூரிய சீனாவுக்கான விஜயத்தின் பின்னர் 2025.10.17 ஆம் திகதி இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விழயம் ஒன்றை மேற்கொண்டு இந்திய பிரதமர் நரேந்தி மோடி, வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் உட்பட பலரையும் சந்தித்து உரையாடல்களை செய்திருக்கின்றார். இருதரப்பு உறவு மற்றும் இந்திய உதவியுடனான அபிவிருத்ததி திட்டங்களை துரிதப்படுத்துவது உட்பட பல விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விஜயத்தின் போது முக்கியமாக இலங்கையில் கடந்த 08 வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்ற மாகாண சபைகளுக்கான தேர்தலை விவரைவில் நடத்த தேவையான ஏற்பாடுகளை செய்வதாக பிரதர் இந்திய பிரதமர் மோடி மற்றும் ஜெயசங்கர் ஆகியோரிடம் வாக்குறுதி வழங்கி இருப்பதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எப்படியும் அடுத்த வருட ஆரம்பத்தில் இந்த தேர்தலை நடத்த ஏற்பாடுகள் செய்ய இருப்பதாகவும் இந்த இந்திய விஜயத்தின் பின்னால் அறிய முடிகின்றது.

அரசியல் அமைப்பின்றாக 13 ஆவது திருத்தம் பிறக்கவும் அதனை அடிப்படையாக கொண்டு மகாாண சபை முறை உருவாகவும் காரணமாக அமைந்தது இலங்கை இந்திய உடன்படிக்கையாகும். அதன்காரணமாக இலங்கையில் தமிழ் மக்களுக்கு வழங்கி இருக்கின்ற வாக்குறுதிகளில் ஒன்றான அததிகாரப் பரவலாக்கம் பற்றிய கடப்பாட்டை இலங்கை இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய தார்மீக பொறப்பு இந்தியாவுக்கு இருந்து வருகின்றது. அதன் காரணமாகவே இந்தியா மாகாண சபைத் தேர்தல் பற்றி பேச வேண்டும், அரசாங்கம் இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்க வேண்டும் என்ற நிலை இருக் கின்றது. தமிழர் தரப்பு வடக்கில் இருந்து இந்தியாவுக்கு அலுத்தம் கொடுக்கும் போது இந்தியா மாகாண சபைகளுக்கான தேர்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக பதவிக்கு வரும் இலங்கை அரசாலங்கங்களுக்கு அலுத்தம் கொடுத்து வருகின்றது.

அதிலும் மாகாண சபைகளுக்கான அதிகாரம் தொடர்பாக தமிழர் தரப்பு அதனை ஏற்பதில் கடந்த காலங்களில் பலமான இழுபறி நிலை இருந்து வருகின்றது. ஏற்கனவே நடைமுறையில் இருந்ததை விட கூடுதல் அதிகாரம் வேண்டும் என்பது தமிழர் தரப்பின் வேண்டுகோளாகும். ஆனாலும் 13 பிளஸ் தருவதாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயகா, ரனில் விகிரமசிங்கா ஆகியோர் இந்தியாவுக்கு வாக்குறுதிகளை வழங்கிய போதும் 13 உம் இல்லை. 13 பிலஸூம் கொடுக்கப்படவில்லை. மாறாக பதவிக்காலம் பூர்த்தியடைந்த பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவும் இல்லை. இருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் வந்த போது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போதும், ரனில், மைத்திரி, போதாபய ராஜபக்ஷ ஆகியோரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எதையாவது பேசி வந்துள்ளனர். ஆனால் ஆக்கபூர்வமான எதுவும் நடக்கவில்லை.

நல்லாட்சி நிலவிய மைத்திரி ரனில் ஆட்சி காலத்தில் மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவடைந்த முறையை பார்க்கும் போது சபரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைகளின் ஆயுட்காலம் 2017 அக்டோபர் 07 ஆம் திகதியுடன் பூர்த்தியடைந்தன. அதன் பின்னர் எஞ்சியிருந்த 06 மாகாண சபைகளதும் பதவிக்காலம் 2017 டிசம்பர் மாதம் நிறைவடை ந்திருக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் பதவிக்காலம் கலாவதியான மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்துமாறு அப்போதைய நிலையில் பலமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் மாகாண சபைகளுக்கான தேர்தல் கட்டம் கட்டமாக நடத்துவதா அல்லது 2017 டிசம்பர் மாதம் நடத்துவதா என்ற விவாதங்களை ஏற்படுத்தி வேண்டுமென்றே மாகாண சபை தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்பட்டது. அதனார் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் பதவியில் இருந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அப்போது ரனில் விக்கிரமசிங்கா பிரதமராகவும் மைத்திரிபால சிரிசோன ஜனாதிபதியாகவும் இருந்து உரிய நேரத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் காலம் கடத்தினர். ஒரு மாகாண சபையின் பதவிக்காலம் நிறைவடைந்தால் 07 நாட்களுக்குள் அதற்கான தேர்தலை நடத்த வேட்புமனு கோரப்பட்டு 55 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள சட்டமாகும்.

2019 இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ வும் அவரது இரண்டு வருட கால பதவிக்காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் எந்தவிதமான ஆர்வத்தையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக இனவாதிகளைக் கொண்டு இந்த மாகாண சபை முறைக்கான எதிர்ப்பை வலுப்படுத்துவதில் அவரும் உறுதியாக இருந்தார். இவ்வாறாக இழுத்தடிப்பு செய்யப்பட்ட 09 மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்த வேண்டியுள்ள தருணத்திலே தான் புதிதாக 2022 ஏப்ரில் மாதம் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சி காரணமாக பதவிக்கு வந்த ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக வடக்கு கிழக்கு தமிழர்களின் செல்வாக்கை பெறுவதற்காக புதிதாக எதையோ கொடுப்பதற்கு போன்று தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை நாட்டில் 13 யை மேலும் விரிவுபடுத்தி புதிதாக வடக்கிற்கு அதிகாரத்தை பகிந்து கொடுக்க எடுக்கும் சதி என்ற அடிப்படையில் 13 இற்கு எதிராக போராட்டம் வெடித்தது.

ஆனாலும் வடக்கிற்கு இந்த மாகாண சபைகளின் அடிப்படையில் பொலீஸ் மற்றும் காணி தொடர்பான அதிகாரத்தை வழங்குவதாலே நாடு பிளவுபடும் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. எதுவானாலும் ஏற்கனவே நாட்டில் தலைநகரில் குவிந் திருந்த அதிகாரங்களை பரவலாக்கி மக்களின் காலடிக்கு அதிகாரங்களை கொண்டு செல்வது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட 13 ஆவது திருத்தம் மூலம் முழு நாடும் 09 மாகாண சபைகளின் கீழ் ஓரளவிற்கு நிர்வாக அந்தஸ்தை அனுபவித்து வந்திருக்கின்றது. 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து இன்று வரையான எட்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் இந்த மாகாண சபைகளுக்கு ஆளுநர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டு மாகாண ஆணையாளர் நாயகம் மற்றும் மாகாண செயலாளர் ஆகியோரின் ஊடாக மாகாண சபை நிர்வாக செயற்பாடுகள் முன னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தல் பிச்சார காலப்பகுதியில் ஆட்சிக்கு வர முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் முக்கியமான விடயம் அப்போது நடத்தப்பட பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தோதல்களை உரிய காலத்தில் நடத்துவோம் என்பதாகும். ஆனாலும் மாகாண சபைகளுக்கான தேர்தல் தவிர ஏனைய தேுர்தல்கள் நடத்தப்பட்டுவிட்டன. எஞ்சி இருப்பது மகாண சபைகளுக்கான தேர்தலாகும். இந்த தேர்தலை நடத்துவது தொடர்பாக புதிய சர்ச்சைகள் உருவாகி இருக்கின்றன. ஒருபுரம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்ற வாக்குறுதியை வழங்கி வருகின்ற அதே நேரம் உள்நாட்டில் அந்த தேர்தலை எவ்வாறு எப்போது நடத்துவது என்ற நெருக்கடியை சந்தித்து வருகின்றது.

இந்த நெருக்கடிக்கு காரணம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமு றைக்கு கொண்டு வரப்பட்டதாகும். இந்த சட்டத்தின் அடிப்படையில் அதுவரையில் நடைமுறையில் இருந்த விகிதாசார தேர்தல் முறைக்கு பதிலாக கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேுண்டும் என்ற சட்டமாகும். அந்த சட்டத்தின்படி புதிதாக தேுர்தலை நடத்த எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டி ஏற்பட்டது. அதற்காக நியமிக்கப்பட்ட குழு எல்லை நிர்ணயத்தை செய்து சமர்ப்பித்த போதும் குறித் எல்லை நிர்ணய அறிக்கையில் குறைபாடு இருந்ததால் அந்த எல்லை நிர்ணயம் நிராகரிக்கப்பட்டது. அத்துடன் மாகாண சபைத் தேர்தலுக்கான கலப்பு தேர்தல் முறையும் நடைமுறையில் இல்லாமல் ஆக்கப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரையில் மாகாண சபைத் தேர்தல் பற்றிய கணவு நிறைவேறாத ஒன்றாக இருந்து வருகின்றது. ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஆகிய தேுர்தல்கள் நடந்து முடிந்துள்ள நிலையில் ஏன் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது என்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயம் விளக்கம் ஒன்றை வழங்கி இருக்கின்றார்.

அந்த விளக்கத்தின்படி இப்போது உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த மாகாண சபைத் தேர்தல் சட்டம் ஒன்று நடைமுறையில் இல்லை. பழைய முறையிலான விகாதாசார தேர்தல் முறையின் அடிப்படையில் நடத்துவதா அல்லது கலப்பு முறையில் நடத்துவதா என்ற ஏதாவது சட்டம் ஒன்று இருக்க வேண்டும். அதனால் ஏதாவதொரு சட்டத்தை அரசாங்கம் ஏற்பாடு செய்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றி தர வேண்டும். அவ்வாறான ஒரு சட்டம் வந்தால் எந்த முறை யானாலும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற பொறுப்பு தேர்தலை நடத்தி முடிப்பதாகும். ஏற்கனவே செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணயத்தின் அடிப்படையி லாவது இந்த தேர்தலை நடத்தி முடிக்கலாம். இருந்த சட்டத்தை இல்லாதொழித் தவர்கள் 2019 இற்கு முன்னர் இருந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுமாவர். அதை சரியாக விளங்காமல் தேர்தல் ஆணை க்குழு மீது குற்றம் சுமத்த வேண்டாம். தேர்தல் ஆணைக்குழு மீது குற்றம் சுமத்தும் அரசியல்வாதிகள் தேர்தல் நடத்த மாகாண சபைத் தேர்தல் சட்டம் ஒன்று நடைமுறையில் இல்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று அண்மையில் ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு பின்னணியல் தற்போதைய அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கி வாக்குறுதியின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதற்கான புதிய சட்ட ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அண்மையில் அரச தரப்பு அமைச்சர் ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில் பழைய முறையான விகிதாசார தேர்தல் முறையின் அடிப்படையில் அடுத்த வருடம் மாகாண சபைகளுக்கான தேுர்தலை நடத்துவோம் என்றார்.

அதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். அந்த வகையில் ஒன்றில் பழைய முறையா அல்லது புதிய முறையான கலப்பு முறையா எதுவானாலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த சட்டம் ஒன்று அவசியமாகின்றது.

இருந்தாலும் கலப்பு முறை என்றால் எல்லை நிர்ணயம் தேவைப்படுகின்றது. ஆனால் தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே 2019 இல் தூக்கி வீசப்பட்ட எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் தேர்தலை நடத்த முற்பட்டால் அது மேலும் சக்கல்களை உருவாக்கும். அதனால் வரப்போகின்ற புதிய சட்டம் பழைய முறையான விகிதாசார பிரதிநிதித்துவ முறையாக இருந்தால் ஒருவிதத்தில் எந்தவிதமான சிக்கலையும் எற்படுத்தாது.



# புறக்கணிக்கும் பிரதேச சபை; மக்கள் ஒத்துழைப்புடன் வடிகான் துப்புரவுப்பணி முன்னெடுப்பு

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிச்சேனை பிரதேசத்திலுள்ள வடிகான்களை துப்புரவு செய்து தருமாறு பல்வேறு கோரிக்கைகள் தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல். சமீமினால் முன்வைக்கப்பட்ட நிலையில் தொடர் புறக்கணிப்பை பிரதேச சபை மேற்கொண்டு வருவதனால் பிரதேச சபை உறுப்பினரின் முயற்சியினால் இன்று வடிகான் துப்பரவு செய்யப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.சமீம் கோறளைப்பற்று மத்தி பதில் பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், ஓட்டமாவடி பிரதேச சபைத்தவிசாளர் எம்.எச்.எம்.பைறூஸ், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர் எம்.ஏ.சி.எம்.



நியாஸ் ஆகியோரின் ஒத்துழைப்போடு மாவடிச்சேனை அல் இக்பால் வித்தியாலய வீதியிலுள்ள வடிகான் இருபது வருடங்களின் பின்னர் துப்பரவு செய்யும் பணி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இருபது வருடங்களாக எந்தவொரு புனரமைப்புக்களும் இடம்பெறாமல் கவனிப்பாறற்று புறக்கணிக்கப்பட்டிருந்த குறித்த வடிகான் கிளீன் சிறீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.சமீமினால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த விடயம் தொடர்பில் சபையின் நான்கு அமர்வுகளின் போதும் பல தடவை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தும் எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டிருந்து தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட குறித்த பிரதேச வடிகான் துப்புரவு பணியினை மழைக்காலம் ஆரம்பித்த நிலையில் விரைவாக செய்து முடிக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் துரிதமாக செயற்பட்ட பிரதேச பள்ளிவாயல்கள், பிரதேச சமூகமட்ட அமைப்புக்கள், இளைஞர்களின் ஒத்துழைப்போடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமைக்கு தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.சமீம் நன்றியை தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளராக ஹக்கானி நியமனம்!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டத்திற்கான இளைஞர் அமைப்பாளராக ஏ.எம்.எஸ். ஹக்கானி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கட்சியின் தவிசாளராக பணியாற்றிய முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான காலம்சென்ற முழக்கம் ஏ.எல். அப்துல் மஜீதின் புதல்வருமாவார்.

மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை (20) நடைபெற்ற கட்சியின் நிகழ்வொன்றின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, கல்முனை மாநகர முன்னாள் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர், கட்சியின் உதவிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளரும் பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளருமான எஸ்.எம்.எம். முஷாரப், கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி. சமால்தீன் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# எத்தியோப்பியாவின் இஸ்லாமிய விவகார உயர்மட்ட சபையின் முன்னாள் தலைவர் 94 ஆவது வயதில் காலமானார்



(எம்.ஐ.அப்துல் நஸார்)

எத்தியோப்பிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான உயர்மட்ட சபையின் முன்னாள் தலைவரும், முதலாவது முப்தியுமான சங்கைக்குரிய ஹாஜி உமர் இத்ரீஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) தனது 94 வயதில் காலமானார்.

சங்கைக்குரிய ஹாஜி முப்தி மிகுந்த மரியாதைக்கும் போற்றுதலுக்கு உரியவராக இருந்ததுடன் எத்தியோப்பியாவிலுள்ள அனைத்து சமயங்களையும் சோர்ந்த சமூகங்களால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவராவாராகவும் இருந்தார். எத்தியோப்பிய மக்களிடையே ஒற்றுமை மற்றும் இணக்கப்பாட்டை வளர்ப்பதில் அவரது உறுதியான அர்ப்பணிப்பு அவரது வாழ்நாள் பணியாக இருந்தது.

இரக்க சுபாவமுள்ள சமயத் தலைவராகவும், பரந்துபட்ட ரீதியில் எத்தியோப்பிய சமூகத்திற்கும் உண்மையாகவும் நேர்மையுடன் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சமகால, எதிர்கால அரசியல் சம்பந்தமான கலந்துரையாடல்



(றிபாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்துள்ள சமகால, எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் சம்பந்தமான மக்கள் சந்திப்பு மருதமுனையில் நடைபெற்றது.

கட்சியின் மருதமுனை அமைப்பாளர் எம்.எச்.எம்.தாஜ/தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர் எம்.எஸ்.உதுமாலெப்பை, உட்பட பிரதேச சபைகளின் தவிசாளர்கள்,கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச அமைப்பளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல், கட்சி எதிர்நோக்கியுள்ள சவால்கள், அபிருத்திகள், கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரன்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளையும் எதிர் காலத்தில் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




# வாசிப்பும் வயதெல்லையற்ற அதன் பரப்பும்

வாசிப்பு ஒரு பொழுது போக்கு அம்சமல்ல.

அது வளமான வாழ்வுக்கான வெற்றிகரமான வழிகாட்டி. வாசிக்க வாசிக்க வாழ்வு வளமாக மாறும். சிந்தனை சீராகும். கருத்துக்கள் பிறக்கும். கற்பனைகள் எழும். அறியாமை இருள் உடனுக்குடனும் படிப்படியாகவும் விலகும். அகன்றுவிடும். அறிவை நோக்கிய அலாதியான ஈடுபாடு பெருகும். எம்மைச்சூழ நிகழும் மர்மங்கள் விலகும்.

நாங்கள் நினைப்பது போல வாசிப்பு குழந்தைகளுக்கு மட்டுமானதல்ல. பாடசாலை மாணவர்களுக்கானதுமல்ல.

இறுதித் தூதராக முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ் நபியாக தெரிவு செய்யும் போது அவருக்கு வயது நாற்பது. இறைவன் ஏவிய முதல் வசனம் "வாசிப்பீராக" அதற்கு நபியவர்களது பதில் எனக்கு வாசிக்க முடியாது தெரியாது என்பது தான்.

ஆனாலும் எழுத்தும் வாசிப்பும் வாழ்வும் படைத்த இறைவனும் பின்னிப்பிணைந்தாற் போல அதனையே முதல் ஐந்து வசனத்திலும் இறைவன் மீள மீள வலியுறுத்தி கூறி அழுத்தமாகவே அதன் எல்லையற்ற செயற்பாட்டுக்கு தூண்டுதல் தருகின்றான்.

நாற்பது வயது கடந்தும் நான்கு விடயங்களை நன்கு வாசிக்க வேண்டும். வாசிக்க முடியாவிட்டால் முயற்சி செய்து வாசிக்க வேண்டும்.

படைத்த உமது இரட்சகனின் பெயரை வைத்து வாசிப்பீராக என்பது இந்த உலகில் உயிர் வாழும் வரை வாசிப்பீராக என்று அர்த்தம் கொள்ளலாம். அதுதான் இன்று வேறு வார்த்தையில் வாழ்நாள் நீடித்த கல்வியாக பரிணாமம் பெற்றுள்ளது life long education முதல் கட்டளை வாசிப்பீராக என்பது தான்.

எனவே குழந்தைகளுக்கு முதலில் பழக்க வேண்டியதும் வாசிப்புதான். காரணம் இஸ்லாத்தில் தொழுகையை ஏவுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப வயதெல்லை 7 மூன்று வருடங்கள் அதற்கு பயிற்சி தர வேண்டும்.

ஆனால் வாசிப்பு பழக்கம் அதனை விடவும் முந்தியது. காரணம் சுமார் ஆறு வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுகின்றனர். எனவே பருவ வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அமைவான அளவில் வாசிப்பு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வாசிப்பு எப்போதும் வணக்கமாக அமைந்து விடுகிறது.

அது நிதானத்தை நிம்மதியை தருகிறது. வாசிப்பால் நீண்ட காலம் கூட வாழ முடியும்.

எமது சமூகம் வாசிப்பை விட்டும் ஏன் தூரமாகி விலகி இருக்கின்றது.

அது வாசிப்பு அமல் என்பதை இன்னும் விளங்கவில்லை. தெளிவாக விளக்கினாலும் ஏற்றுக்கொள்ள தயாரில்லை. மீள வலியுறுத்தினாலும் அது ஜீரணிப்பது மில்லை.

வாசிப்பை வணக்கமாகவும் வாழ்வாகவும் அமைக்க திடசங்கற்பம் பூண்டு எமது வாழ்வை மாற்றி அமைப்போம்.

## மனநலமும் ஆலோசனையும் 91

# “அறிவு உயர்த்தும், ஒழுக்கம் நிலைநிறுத்தும்”

இன்றைய உலகில் அறிவு பெருகிக் கொண்டே வருகிறது. அதற்கான வாய்ப்புகளும் புதிது புதிதாக வந்துகொண்டே இருக்கின்றன.

ஆனால் ஒழுக்கம் குறைந்து கொண்டே வருகிறது என்று சொல்லக் கேட்கிறோம். அறிவும் ஒழுக்கமும் சேர்ந்ததாக எமது வாழ்வு பயணிக்க வேண்டும். அதனால் போலும்,

அறிவில்லாதவன் தவறுவான், ஒழுக்கமில்லாதவன் அழிவான்!" என்று சொல்லப்படுகிறது.

“கல்வி நமக்கு வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொடுக்கிறது.

ஆனால் ஒழுக்கம் நமக்கு மனிதராக வாழக் கற்றுக் கொடுக்கிறது.”

அழகான, வளமான, ஆரோக்கியமான வாழ்க்கை பயனுள்ள அறிவில் இருந்து ஆரம்பிக்கிறது.

பயனும் பிரயோசனம் உள்ள அறிவில் இருந்து தான் ஒழுக்கமுள்ள தனிமனிதன் உருவாகிறான்.

ஒழுக்கத்தால் ஓங்கிய சமூகத்தின் அடிப்படையே பயனுள்ள அறிவாகும்.

“ஒழுக்கம் தராத கல்வியும் விளைச்சல் தராத பயிரும் வீணாகிவிடும்“ என்று நாம் கற்று இருக்கிறோம். தனிமனித முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் ஒழுக்கத்தை வைத்தே அளவிடப்படுகிறது.

அறிவுடன் சேர்ந்ததாக ஒழுக்கம் கிடைக்கும் போதே மனிதனும் அவன் வாழும் சமூகமும் வளம் பெற்றதாக இருக்கும்.

அறிவு எமக்கு கட்டாயம் தேவை. அதில் கடுகளவும் சந்தேகம் இல்லை. ஆனால் ஒழுக்கம் இல்லாத அறிவு எவ்வளவு இருந்தும் என்ன பயன்.

வீட்டிலும் பாடசாலையிலும் அறிவுடன் சேர்ந்ததாக ஒழுக்கமும் பிள்ளைகளுக்கு கிடைக்குமானால் அவர்கள் வாழ்வில் எப்பவும் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகம் பெறுவார்கள்.

சாட்சிகள் இல்லாத இடங்களில் தவறுகள் செய்யாமல் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளும் அழகான வாழ்வியலை அறிவு சேர்ந்த ஒழுக்கம் மட்டுமே பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் என்பதை பெரியவர்கள் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவோடு சேர்ந்ததாக ஒழுக்கத்தை கற்றுக் கொள்ளாத பிள்ளைகள் அறிவில் மேலோங்கி விளங்கினாலும் சுய வாழ்விலும் சமூக வாழ்விலும் மன உளைச்சலுக்கு ஆளாகி வாழ்வில் எந்த ஒன்றிலும் இன்பத்தை அனுபவிக்க முடியாதவர்களாக ஆகிவிட அதிக வாய்ப்பு உண்டு.

மனிதனிடம் சுலபமாக ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், பள்ளிப் பருவத்தில் அல்லது மாணவப் பருவத்தில் தான் அதை புகுத்த முடியும். ஒழுக்கமுள்ள சமூக உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு அளப்பரியது.

அதனால் எமது வீடுகளும் கல்விக் கூடங்களும் அறிவுடன் சேர்ந்த ஒழுக்கத்தை வழங்கும் இடங்களாக இருக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வோம்.

நாம் பிள்ளைகளுக்கு கல்வியை மட்டும் அல்ல, மனிதத்தையும் கற்பிக்க வேண்டும்.

அப்போதுதான் புத்தக அறிவு புண்ணியமாகும், சமூக வாழ்வு வளமாகும்!"



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---




நாச்சியாதீவு பர்வீன்

# லறீனா அப்துல் ஹக்கின் ‘தஜ்ஜாலின் சொர்க்கம்’

எஸ். ஃபாயிஸா அலி

“அவளைப் பன்மையில் பார்த்தேன் இல்லை அவள் பெருகிக் கொண்டிருந்தாள் அந்தக் கூட்டத்தில் அவளைப் பிரித்தெடுக்க முடியவில்லை”

சகோதரர் றியாஸ் குரானாவின் இந்தக் கவி வரிகளை வாசிக்கும் போதெல்லாம் சட்டென நினைவுக்கு வருவது தங்கை லறீனாவின் முகமே.

கவிதை, பாடல், இசை, மெட்டு, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வு, மொழியாக்கம், விளையாட்டு (அதிலும் பல்வகைமை), குடும்பப் பொறுப்புகள் நான் பிரமித்துப் போகும் அவருக்கான முகங்கள் தான் எத்தனை எத்தனை! இத்தனைக்கும் அவர் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதிக் கற்கைக்கான ஆய்வு மாணவரும் கூட! அல்ஹம்துலில்லாஹ்.

லறீனாவின், “தஜ்ஜாலின் சொர்க்கம்” சிறுகதைத் தொகுதியைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சகோதரர் ஹபிபுல்லாஹ் மௌலவி அவர்கள் வீடு தேடி வந்து தந்த அன்று இரவோடு இரவாய் வாசித்து முடித்திருந்தேன். ஈரம் கசிந்த விழிகளோடும் நொந்திளகிப் போன இதயத்தோடும் என் வாசிப்பனுபவத்தைப் பதிவாக்க வேண்டும் என்னும் பேரவாவோடு அடுத்தடுத்து வந்த பல இரவுகள் புத்தகமும் பேனாவும் குறிப்புக் கொப்பியுமாய் மறுபடியும் மறுபடியும் பக்கங்களுக்குள் கரைந்தும் கதைகளின் உயிர்ப் பாத்திரமாய் வாழ்ந்து முடித்தேனே தவிர எழுத ஒருவரி கூட வரவில்லை.

எத்தனை எத்தனை வலிகள், வேதனைகள், உதிரம், கண்ணீர் அதனை எதிர்கொள்ளவும் கடக்கவும் துணியும் அப்பெண் மனங்களின் போராட்டங்களின் பல்பரிமாணத் தன்மைக்குள் நம் கண்ணீரும் வலியும் மறுபடியும் நம்மைப் புதுப்பித்தும் உயிர்ப்பித்தும் கொள்கின்றன வேயொழிய வெண் தாளில் வரிகள் மட்டும் வந்து விழுவதாயில்லை. ஏறத்தாழ 100 புத்தகங்களுக்கு மேல் என் வாசிப்பு அனுபவத்தை இரசனைக் குறிப்பாய் எழுதி முடித்திருந்தும் வார்த்தையில் வடித்துவிட முடியாத, உணர மட்டுமே முடிந்த ‘தோற்றுப் போதலின்’ புத்தம்புது அனுபவம்.

“ஆழ்ந்த துயரால் மன கிண்ணம் நிரம்பி வழிகின்ற பொழுதுகளில் அவை வார்த்தையின் வடிவெடுத்துத் தான் அழிந்துவிடுகின்றனவோ’ எனும் குமுறலோடு தொடரும் இச்சிறுகதைத் தொகுப்பில் மொத்தம் 10 சிறுகதைகள். இது அவரின் 10 வருட கடின உழைப்பும் கூடவாம். கொடகே ஆக்க இலக்கியப் போட்டியில் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி இது.

சகோதரர் றஷ்மி அஹ்மதின் கைவண்ணத்தில் ஒற்றைக் கண் கொண்ட தஜ்ஜாலின் கொடூர முகம் முன் அட்டையிலும், லறீனா அப்துல் ஹக்கின் கம்பீரப் பார்வையுடன் கூடிய அழகுப் புன்னகை பின்னட்டையிலும் ஓவியக் கவிதையாய் விரிகின்றன.

‘‘கவிதை எழுதும் கதைகள்” எனும் தலைப்பில் கவிஞர் புதிய மாதவி மிகச் செறிவான உரை ஒன்றைத் தந்திருக்கிறார். அதில் தான் உணர்ந்து கொண்ட லறீனா பற்றியும், அவரது கவிதை மொழி பற்றியும், அதனூடாக லறீனா விவரிக்கும் கதை மாந்தர்களின் நுண்ணிய உணர்வுகள் பற்றியும் எடுத்துச் சொல்கிறார்.

“எழுத வரும் பெண்களின் வாழ்க்கையும் அவர்கள் எதிர்கொள்ளும் ஊசிமுனைப் போராட்டங்களும் கண்ணுக்குத் தெரியாத காயங்களும் கதைப்பொருள் ஆகின்றன. எழுத்துலகில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொரு பெண்ணும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பதாக இருப்பது பெண்களின் கதைக் களம் காணும் புனைவுகள் அல்ல. அவை வாழ்க்கையில் அப்பெண்கள் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கின்றவை தாம்” என்கிறார், புதிய மாதவி.




தொகுதியின் முதல் கதை, ‘ஒரே ஒரு கனவுகூட மிஞ்சவில்லை’. சிசுவாய், குழந்தையாய், சிறுமியாய், குமரியாய் என பெண்களின் வாழ்க்கைப் பருவங்கள் அத்தனையிலும் அவள் சுமக்கும் கனவுகளோ கோடி கோடி. பல வண்ணங்களில் பல பருமன்களில் மனத்தரையினில் மலைக்குன்றுகள் என நிறைந்து கிடக்கும் கனவுகள் நனவாகும் வரம் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்தம் வாழ்வோ கொண்டாட்டத் திற்குரியவை. பூரிப்பு நிறைந்தவை. ஆனாலும், கதையின் நாயகி நிஸா மாமியின் மொத்தக் கனவுகளும் ஊதிக் கட்டிய பலூன்களில் ஊசியால் குத்துவது போல ஒவ்வொன்றாய் உடைக்கப்படுகின்றன.

புரிந்து கொள்ளாத கணவரோடு இணைந்து வாழ முடியாத நிலை வந்தபோதும் கூட, வயிற்றில் வளரும் தன் வாரிசுக்காய் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு மிச்ச வாழ்க்கையையும் வாழ்ந்துவிட முடிவு செய்கிறாள் நிஸா. அப்போதும்கூட இறுமாப்பு நிறைந்த அந்த ஆண் அவளைச் சும்மா விட்டு விடவில்லை. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து என்பது போல இறுதியில், ”ஒன்னை மாதிரி ஒரு புள்ள பொறக்காட்டியும் பரவாயில்லை” என்கிறான்.

”என்ட குணங்கள் என்ட புள்ளைக்கி வரப்படாதாமே அப்பிடி ஒரு புள்ளையே தேவையில்லையாமே! அப்படியென்டா நான் கூட தேவையத்தவள் தானோ?” (ப.48). அத்தோடு முடிந்து விடுகிறது, அவள் இறுதிக் கனவும்.

“வசந்தங்கள் பூத்தபோது குயில் இறந்து போவது எவ்வளவு துக்ககரமானது என்பதை உன்னால் உணர முடிகிறதா?” (ப.42) என்று அந்தப் பெண் கேட்பாளே ஒரு கேள்வி. இதற்கு மேல் வேறென்ன வேண்டும் அந்த நிஸாவின் உணர்வுநிலையினை உணர்ந்திட?

இரண்டாவது கதை, ‘பொம்புள’. கணவனைப் பறிகொடுத்த விதவைப் பெண் தனது மிச்ச வாழ்க்கையை வாழவும், தன் குழந்தைகளை வாழ வைக்கவும் வழியின்றித் தவிக்கிறாள். இறுதியில் தனது அன்புக் கணவர் விட்டுச்சென்ற ‘ஸ்கூல் சர்வீஸ் வேனை’ தான் ஓட்டும் முடிவுக்கு வருகிறாள் சித்திம்மா.

அவளின் இந்தத் துணிச்சலான முடிவைக் கண்டு அதிர்ந்து போகும் அவளைச் சுற்றியுள்ள ஆண்கள் சமூகமோ, ‘விதவைப் பெண் என்றால் அடங்கி ஒடுங்கி வீட்டுக்குள்ளேயே கிடக்க வேண்டும் தாம் பிச்சை போடும் சாக்கில் அடிக்கடி அவள் அருகில் சென்று உரசிக் கொள்ள வேண்டும்’ என்றே விரும்புகிறது.

அந்தப் பெண் தன் தொழில் முடிவில் உறுதியாக நிற்பது கண்டு சமூகம் அவள் மீது சந்தேகம் கொண்டு களங்கம் கற்பிக்க முற்படுகிறது.

அடுத்தவாரம் தொடரும்...

# மௌன ஓசை நூல் வெளியீட்டு விழா!









ருஸ்தா லுக்மான் எழுதிய நூல் மௌன ஓசை கவிதை நூல் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பான முறையில் பெற்றோர்கள் முன்னிலையில் 11/10/2025 சனிக்கிழமை கஹடோவிட முஸ்லிம் ஸ்டடி சேர்கிளில் வெளியீடு செய்யப்பட்டது. அவ்வேளை பெற்றோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு ரயீஸா ரஸ்ஸாக் குமாரி முல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் உப அதிபர் தலைமை தாங்கினார். பிரதம அதிதியாக ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகம் M.M.முஹம்மட் கலந்து சிறப்பிக்க முதல் பிரதியினை பிரபல வர்த்தக பிரமுகர் சமூக சேவையாளர் பஸீர் அலி பெற்று கவிதாயினியை ஊக்குவித்தார்.

கௌரவ அதிதியாக கலந்து கொண்ட வளவாளர் U.K ரமீஸ் அவர்கள் விஷேட அதிதி உரையினை நிகழ்த்தியதோடு மௌன ஓசையின் வரிகளை வரி வரியாக அலசி ஆராய்ந்து ஆழகாக வார்த்தெடுத்தார்.

அச்சமயம் சிங்கள மொழி மூலமான ஒரு சிறப்புப் பேச்சொன்றையும் சமூக சேவையாளர் கியாஸ் ஹாஜியார் ஆற்றினார்கள்.

கம்பஹா மாவட்ட முஸ்லிம் மீடியா போரம் தலைவர் கலாபூஷணம் எம்.ஏ.எம். நிலாம் நூல் விமர்சனம் செய்தார்.

கவிஞர் எழுத்தாளர் நாச்சியார் தீவு பர்வீன் நூல் நயவுரையும் அரங்கத்தை சிறப்பாக்கியது.

நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஹிமா பெண்கள் நலன்புரிச்சங்கத்தின் தலைவி நஸ்மியா நஸ்மி நலன் புரிச்சங்கத்தின் சார்பாக கவிஞர் ருஸ்தா லுக்மானை பொன்னாடை போர்தி கௌரவித்து அரங்கத்தை அழகுறச் செய்தார்.

அனைத்து உரைநிகழ்வுகளும் பார்வையாளர்களை சலிப்படையச் செய்யாது இனிவரும் பெண் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தும் உந்து சக்தியாகவே அமைந்திருந்து.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக A.S.முஹம்மத் முன்னாள் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் தயாரிப்பாளர் இலங்கை ஒளிபரப்புக்கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவை இஸ்பஹான் சாப்தீன் மற்றும் மனாஸ் மக்கீன் ஊயகுகுநு அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

எழுத்துக்களை கருவாக்கி பல வலிகளையும் அதன் ரணங்களையும் சுமந்து பிரசவமான அவரது நூல் வெளியீட்டு விழாவிற்கு எழுத்தாளர்கள் ஊடகவியளாளர்களின் ஒத்துழைப்பு மட்டுமன்றி ஊர்மக்கள் மற்றும் நண்பர்களின் பெரும் ஒத்துழைப்பால் அரங்கம நிறைந்திருந்தது என்றால் மிகையாகாது.

**எழுத்தாளர்**
**உளவள ஆலோசகர்**
**லுதுபியா லுக்மான்**

# றிஸ்வி முப்தியின் பங்கேற்புடன் இடம்பெற்ற ஆதம்பாவா மௌலவியின் கௌரவிப்பு விழா!




**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் முன்னாள் தலைவரான அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா அவர்களுக்கான கௌரவிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (26) சாய்ந்தமருது, மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் மதனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். றிஸ்வி முப்தி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன் விழா நாயகனுக்கான பிரதான கௌரவ விருதையும் வழங்கி வைத்தார்.

அல்ஹாபிழ் சஜீத் சலீம் அவர்களின் கிறாஅத்துடன் ஆரம்பமான இவ்விழாவில் அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர் கனி வரவேற்புரை நிகழ்த்தினார். சாய்ந்தமருது ஜம்இயத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். சலீம் விஷேட உரை நிகழ்த்தினார்.

கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எம்.எம். பஷீர், அஷ்ஷெய்க் ஆசாத் ஷாமில், அஷ்ஷெய்க் அபூபக்கர் றிஸ்வின் ஆகியோரின் தயாரிப்பில் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி பற்றிய விவரணக் காணொளி ஒன்றும் விஷேடமாக காட்சிப்படுத்தப்பட்டது.

அத்துடன் சமய, சமூக மற்றும் கல்வித் துறைகளில் அவர் ஆற்றிய உன்னத சேவைகள் பற்றிய சிறப்புக் கட்டுரைகள் மற்றும் வாழ்த்துச் செய்திகள் அடங்கிய ”நினைவுச் சோலை” எனும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் பொருளாளர்

அஷ்ஷெய்க் இஸட்.எம். நதீர் அவர்கள் இந்த சிறப்பு மலரின் அறிமுக உரையை நிகழ்த்தினார். சிறப்பு மலரின் முதல் பிரதிகள் 10 பிரமுகர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

விழா நாயகனுக்காக வாழ்த்துப்பா ஒன்றும் வாசிக்கப்பட்டு, அவரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் ஜம்இய்யதுல் உலமாவின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 14 பிரதேசக் கிளைகள் சார்பிலும் அவர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பிரதம அதிதியாக கலந்து கொண்ட றிஸ்வி முப்தி அவர்களுக்கு அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் சார்பில் விசேட நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.




**பயாஸா பாஸில்**

# முயற்சி கைகூடாமல் போனால்!?



மனித வாழ்க்கை ஒரு நீண்ட பயணம் போன்றது. அந்தப் பயணத்தில் வெற்றி, தோல்வி இரண்டும் நாம் பார்க்க வேண்டிய பக்கங்கள். ஒவ்வொருவரும் வெற்றியை விரும்பினாலும், சில சமயம் முயற்சிகள் கைகூடாமல் போகலாம். ஆனால் அதுவே நம் பயணத்தின் முடிவாகாது - அது ஒரு புதிய தொடக்கம் தான்.

முயற்சி கைகூடாதபோது மனம் தளராமல் இருக்க வேண்டும்., நிதானமாக என்ன தவறானது என்பதை உணர்வது மிக முக்கியம். தவறுகள் ஒரு பாடம் அளிக்கின்றன. அவை நம்மை வளரச் செய்கின்றன. “தோல்வி என்பது வெற்றிக்கான படிக்கட்டு” என்ற பழமொழி இதற்கே தகுந்தது.

மீண்டும் எழுந்து முயற்சி செய்யும் மனபக்குவம் வெற்றியாளர்களின் அடையாளம். உலகில் எந்த பெரிய சாதனையும் ஒரே முயற்சியில் முடியவில்லை. ஒருமுறை விழுந்தால் மீண்டும் எழுவது - அதுவே உண்மையான தைரியம்.

நம்பிக்கை, பொறுமை, உறுதி ஆகிய மூன்றும் நம்மை முன்னேற்றும் சக்திகள். மனதில் நம்பிக்கை இருந்தால் தோல்வி கூட நம்மை வலிமையாக்கும். ஓயாமல் முயன்றால் ஒருநாள் வெற்றி நிச்சயமாக நம் கதவைத் தட்டும்.

அதனால், முயற்சி கைகூடாதபோது மனம் தளராமல், உற்சாகத்துடன் மீண்டும் எழுங்கள். இன்று தோல்வி ஆனாலும், நாளை அது உங்கள் வெற்றிக் கதை ஆகும்!

# காசாவில் போர் முடிவுக்கு வந்ததன் பின்னணி என்ன!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

காசாவில் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு மேலாக நடந்த போர் நிறுத்தம் தற்போது அமலுக்கு வந்த நிலையில் கூட இஸ்ரேலிய வலது சாரிகள் மீண்டும் மீண்டும் போர் தேவை உள்ளது என்று தூண்டி வரும் நிலையில் அமெரிக்கா அவசரமாக தனது சகாக்களின் உதவியுடன் இஸ்ரேலுக்கு மிகவும் கடுமையாக முறையில் எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. எகிப்தின் செங்கடல் ஓரத்தில் ஷார்ம் எல்-ஷேக் என்ற ரிசார்ட்டில், இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன பேச்சுவார்த்தையாளர்கள் ஹோட்டலின் தனித்தனி மாடிகளில் இருந்தனர். கத்தார் மற்றும் எகிப்தைச் சேர்ந்த மத்தியஸ்தர்கள் அவர்களுக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்தினர். இந்த பேச்சுவார்த்தை மூலம் தான் தெளிவான தீர்வு ஏற்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பேச்சுவார்த்தைக்கு வலு சேர்க்கவும், இஸ்ரேலியர்களுக்கு அழுத்தம் கொடுக்கவும், டிரம்ப் தனது மருமகன் ஜாரெட் குஷ்னர் மற்றும் தூதர் ஸ்டீவ் விட்காஃப்பை அனுப்பினார். ஹமாஸ் குழுக்கு அழுத்தம் கொடுக்க கத்தார் பிரதமர், எகிப்து மற்றும் துருக்கி உளவுத்துறைத் தலைவர்கள் வந்திருந்தனர்

இந்த ஒப்பந்தம் பெரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்றாலும், அதற்கு போர் முடிந்துவிட்டது என்று அர்த்தம் அல்ல.

ஆனால், இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்த துயரச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வாய்ப்பு இதன் மூலம் தற்போது உருவாகியுள்ளது எனலாம்.

இஸ்ரேலின் வெற்றி என்பது பணயக்கைதிகள் வீடு திரும்புவது மட்டுமல்ல. ஹமாஸ் அழிக்கப்பட வேண்டும், மேலும் இஸ்ரேலுக்கு ஆபத்தாக உருவாக முடியாதபடி இருக்க வேண்டும்"" என நெதன்யாகு பலமுறை கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஒரு பெரிய முன்னேற்றம் தான். ஆனால், போரை முடிக்க இன்னும் பல படிகள் தேவை. டிரம்பின் திட்டம் ஒரு அடிப்படைக் கட்டமைப்பு மட்டுமே. இதுகுறித்த மேலதிக விபரங்கள் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

இஸ்ரேல் கடந்த இரண்டு ஆண்டுகளாக போரிட்டு 237 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை இந்த போருக்காக செலவு செய்து உள்ள நிலையில் எந்தவொரு வெற்றியையும் பெற முடியாத நிலையில் அந்த நாட்டின் ஜி டி பி 5.7 சதவீதம் என்ற அளவில் குறைந்து விட்டதாக பொருளாதார நிபுணர்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த போரில் யூத சியோனிச தத்துவத்திற்கு ஆதரவாக வலதுசாரி சித்தாந்தம் மிகவும் கடுமையான ஆழுத்தத்தை கொடுத்து வந்த நிலையில் கூட ஒரு நிலையில் தற்போது அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் வரம்பற்ற போக்கை முடிவுக்கு கொண்டு வந்தது என்பது மிகவும் முக்கியமான காரணியாக இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்கா வரலாற்றில் ஒரு நாட்டிற்கு அதுவும் அமெரிக்கா வரலாற்றில் அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே டொனால்ட் ட்ரம்ப் போன்று இஸ்ரேல் நாட்டிற்கு ஆதரவளித்த ஒரு தலைவர் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிகவும் அதிகமான அளவில் பொருளாதாரம் மற்றும் ஆயுத உதவிகளை செய்து வந்த நிலையில் கூட இஸ்ரேல் பொதுமக்களை தான் கொல்ல முடிந்ததை தவிர ஹமாஸ் இயக்கத்தின் ஆணி வேரை அவர்களால் முழுமையாக அழிந்து விட முடியவில்லை என்பதை சர்வதேச நாளேடுகள் தெளிவாக சுட்டி காட்ட தவறவில்லை என்பதே யதார்த்தமான நிலையாகும்.

மிகவும் முக்கியமான ஒன்றாக இஸ்ரேல் ராணுவம் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியான கத்தார் மீது திடீரென தாக்குதலை நடத்தி 6 பேரை கொலை செய்த சம்பவம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பை மற்றும் அல்லாமல் அவரது அரசின் சக துறை சார்ந்த ஆளுமைகள் அனைவரையும் அதிர்ச்சி தரும் வகையில் அமைந்தது தான் இந்த போர் முடிவுக்கு வர மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது என்பதை நாம் சுட்டி காட்ட வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை.

செப்டம்பர் 9 அன்று தோஹாவில் ஹமாஸ் தலைவர்களை கொல்ல இஸ்ரேல் முயற்சி செய்தது. ஆனால் அது தோல்வியடைந்த முயற்சியாக இருந்தாலும் ஒரு முக்கிய திருப்புமுனைக்குக் காரணமான நிகழ்வாக அமைந்தது.

அந்தத் தாக்குதலின் பிரதான இலக்காக ஹமாஸ் மூத்த தலைவர் கலீல் அல்-ஹய்யா மற்றும் முக்கிய துணைத் தலைவர்கள் குறிவைக்கப்பட்டனர். அவர்கள் அந்த நேரத்தில் டொனால்ட் டிரம்ப் முன்வைத்த போர் நிறுத்த திட்டம் குறித்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர்.

அல்-ஹய்யாவும் அவரது குழுவினரும் தாக்குதலில் உயிர் தப்பினார்கள், ஆனால் அவரது மகன் உயிரிழந்தார். தற்போது அல்-ஹய்யா எகிப்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஹமாஸ் குழுவை வழிநடத்துகிறார்.

இஸ்ரேல், கத்தார் மீதான இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்காவிடம் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவில்லை. இதனால் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் கோபமடைந்தார்.

வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் டொனால்ட் டிரம்பைச் சந்திக்க நெதன்யாகு அனுமதி கேட்டபோது, கத்தார் பிரதமரை தொலைபேசியில் அழைத்து மன்னிப்பு கேட்கும்படி நெதன்யாகுவை வலியுறுத்தினார் டிரம்ப்.

நெதன்யாகு தாம் தயார் செய்திருந்த மன்னிப்பு உரையை போனில் வாசித்தபோது போன் ஹாண்ட்செட் கேபிள் நீண்டு இருந்தது. ஏனெனில் டிரம்ப் போனை தன் மடியில் வைத்து கொண்டு நெதன்யாகு பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தார்.

அந்த தருணம் ஒரு ஆசிரியர் தவறு செய்த மாணவனை மன்னிப்பு கேட்கச் சொல்லும் காட்சி போலிருந்தது. அந்த தருணத்தின் புகைப்படங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டது.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, டிரம்ப் ஒரு நிர்வாக உத்தரவை வெளியிட்டு, கத்தார் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளானால் அமெரிக்கா முன்னெப்போதும் இல்லாத அளவிலான பாதுகாப்பை வழங்கும் என அறிவித்தார்.

கத்தார், அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியாகவும், மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிகப்பெரிய ராணுவத் தளத்தைக் கொண்ட நாடாகவும் உள்ளது. மேலும் பிராந்திய அமைதிக்கான டிரம்பின் பரந்த திட்டத்தின் முக்கிய பகுதியாகும் என்பதால் அவருக்கு அந்த மன்னிப்பு தேவைப்பட்டது.அந்த திட்டத்தின் மையத்தில், சௌதி அரேபியா இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பாக்கும் "பெரிய ஒப்பந்தம்" ஒன்று உள்ளது. ஆனால், தோஹா மீதான இஸ்ரேலின் தாக்குதல் அமெரிக்காவை தங்கள் கூட்டாளிகளைப் பாதுகாக்க இயலாத ஒரு நாடாக வெளிப்படுத்தி




விட்டது. இது அமெரிக்கா வின் சுயமரியாதைக்கு விடப்பட சவாலாக அமைந்தது என்பது தான் இந்த போர் முடிவுக்கு வர மூல காரணம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதே சமயம் அமெரிக்கா இன்னும் இஸ்ரேலின் சக்திவாய்ந்த கூட்டாளியாக இருந்தாலும், சமீபத்திய கருத்துக் கணிப்புகள் பெரும்பான்மையான அமெரிக்கர்கள் இஸ்ரேலை ஆதரிக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.

பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற பல நாடுகள் பாலஸ்தீனத்தை அரசாக அங்கீகரித்துள்ளன.காஸாவில் நடந்த அழிவுகள், உதவிப் பொருட்கள் மீது இஸ்ரேல் விதித்த தடைகளால் ஏற்பட்ட பஞ்சம் குறித்து இந்நாடுகள் தங்களது பொது அறிக்கைகளில் கடும் அதிர்ச்சியையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

செப்டம்பர் 9 அன்று தோஹா மீது நடத்தப்பட்ட தாக்குதல், அரபு மற்றும் இஸ்லாமிய பெரும்பான்மை நாடுகளில் புதிய அவசர உணர்வை உருவாக்கியது. அரிதான வகையில் ஒன்று திரண்ட இந்த நாடுகள் இஸ்ரேலை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர டொனால்ட் டிரம்புக்கு அழுத்தம் தந்தது.

அதே போல டிரம்ப் முன்வைத்த 20 அம்சத் திட்டம் உண்மையில் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமெனில், அமெரிக்கா தொடர்ந்து இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தம் அடிப்படையில் பிணைக்கைதிகளின் உடல்களை ஒப்படைப்பதற்கு அவகாசம் தேவைப்படுவதாக இஸ்ரேலிடம் ஹமாஸ் கோரிக்கை விடுத்துள்ளது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே 2 ஆண்டுகளாக நீடித்து வந்த போர், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் முயற்சியால் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. அமெரிக்கா முன்மொழிந்த 20 அம்ச திட்டங்களின் முதல் கட்டத்திற்கு மட்டுமே, இருதரப்பும் ஒப்புதல் அளித்துள்ளன.பிணைக்கைதிகளை பரஸ்பரமாக விடுவித்தனர்.

மொத்தம் 28 பிணைக்கைதிகளின் உடல்களை இஸ்ரேலிடம் ஹமாஸ் படிப்படியாக ஒப்படைத்து வருகிறது. பிணைக்கைதிகளின் உடல்கள் அடங்கிய பெட்டிகளை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் ஹமாஸ் இயக்கம் ஒப்படைத்து வருகிறது. அண்மையில், பிணைக்கைதியின் உடலுக்கு பதிலாக வேறு உடலை ஹமாஸ் ஒப்படைத்துள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்த இஸ்ரேல், தங்கள் நாட்டைச் சேர்ந்த பிணைக்கைதிகளின் உடல்களை ஹமாஸ் முறையாக ஒப்படைக்க வேண்டும் என்று ஹமாஸ்"க்கு எச்சரிக்கை விடுத்தது. அதேவேளையில், ஹமாஸ் ஒப்பந்தத்தை கடைபிடிக்கவில்லை எனில், இஸ்ரேல் காசாவில் தாக்குதலை தொடங்கலாம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், நேற்றிரவு மேலும் இரு பிணைக்கைதிகளின் உடல்களை இஸ்ரேலிடம் ஹமாஸ் ஒப்படைத்துள்ளது. மேலும், காசாவின் இடிபாடுகளில் சிக்கியுள்ள பிணைக்கைதிகளின் உடல்களை மீட்டுக் கொண்டு வர அவகாசமும், நவீன உபகரணங்களும் தேவை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. தற்போது வரை மொத்தம் 28 உடல்களில் 9 பேரின் சடலங்கள் இஸ்ரேலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தம் செய்த நாடுகளின் உதவியுடன் எஞ்சியவர்களின் உடல்களை தேடும் பணியில் ஹமாஸ் அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கா வரலாற்றில் பல்வேறு போரில் அவர்கள் நேரடியாக ஈடுபட்ட நிலையில் தோல்வியை சந்தித்து தான் வெளியேறும் நிலையில் உலகின் எந்த சக்தியாலும் வெல்ல முடியாது என்று சித்தரிக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவம் இருந்து வந்த நிலையில் ஹமாஸ் இயக்கம் இந்த மாய பிம்பத்தை முழுமையாக அழித்து விட்டது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

அதேநேரத்தில் வெறும் 22,250 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள ஒரு நகரம் தான் காசா ஆகும். அங்கு தான் ஹமாஸ் இயக்கத்தின் 40000 மேற்பட்ட போராளி குழுக்கள் செயல்பட்டு வந்த நிலையில் அந்த ஒரு சிறிய குழுவை அழிப்பதாக கூறி கொண்ட இஸ்ரேல் தோல்வியை சந்தித்து வெளியேறியது என்பதை உலகிற்கு ஹமாஸ் இயக்கம் அறிவிப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது வரை காசாவில் வாழ்ந்த மக்களில் 70,000 மேற்பட்ட மக்களை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்துள்ள நிலையில் இது ஒரு அப்பட்டமான மனித இன படுகொலை என்று உலகத்தின் பெரும்பாலான மக்கள் நீதிமன்றம் சுட்டி காட்டியது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். 1,70000 மேற்பட்ட பொதுமக்கள் குண்டு வீச்சில் உறுப்புக்களை இழந்த நிலையிலும் வாழ்நாள் முழுவதும் ஊனமுற்ற மக்களாக மாறி விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போரில் அமெரிக்க இதுவரையில் 900 மேற்பட்ட கார்கோ விமானங்கள் மூலமும், 150 கப்பல்கள் மூலமும் ஆயுதங்கள், மெக்கோவா டாங்கிகள் துணை ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளை அனுப்பிய நிலையில் இஸ்ரேல் ராணுவம் இந்த பேரழிவு ஆயுதங்கள் அனைத்தையும் பயன்படுத்திய நிலையில் கூட வெற்றி பெறாமல் வெளிவந்தது உண்மையில் மிகப் பெரிய அதிர்ச்சி தகவல்கள் என்பது தான் உண்மை. அதேநேரத்தில் இஸ்ரேல் மக்களில் பல இலட்சக்கணக்கான மக்கள் இனி இஸ்ரேல் வாழ தகுதியற்ற தேசம் என்பதை முடிவு செய்து நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இதுவரையில் 136000 பேர் நிரந்தரமாக வெளியேறிய நிலையில் இன்னும் பல்லாயிரக்கணக்கான யூதர்கள் இஸ்ரேல் நாட்டில் இருந்து தொடர்ந்து வெளியேறி கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளில் குடியேறி வருவதாக இஸ்ரேல் டைம்ஸ் நாளிதழில் வெளியான கட்டுரை தெளிவாக கோடிட்டுக் காட்டி உள்ளதை நாம் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்த சமாதானம் இன்னும் பல்வேறு தடைகளை கொண்டு பயணிக்கும் நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது சக அமைச்சர்கள் மத்தியில் ஒரு தெளிவான கருத்துருவாக்கம் உருவாகி உள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே சமயம் அடுத்த மாதம் சவூதி அரேபியா இளவரசர் முஹம்மது பின் சல்மான், துருக்கி, கத்தார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் அமெரிக்கா வுக்கு தரும் அழுத்தம் காரணமாக அமெரிக்கா தற்போது இந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்தே ஆக வேண்டிய தேவையுள்ளது என்பது இந்த ஒப்பந்தத்தில் மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது என்பதை நாம் மறுக்க முடியாத ஒன்றாகும். அதேநேரத்தில் இதே சூழல் தொடரும் நிலையில் பாலஸ்தீனம் தனி சுதந்திர நாடாக மாறும் நிலையில் அதிகம் தொலைவில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.




அரபாத் பஹுர்தீன்

# தெற்காசிய சிரேஸ்ட தடகள சம்பியன்ஷிப்

## 16 தங்கப்பதக்கங்களைப் பெற்ற இலங்கைக்கு 2ஆம் இடம்

இந்தியாவின் ராஞ்சியில் நேற்று (26) முடிவடைந்த தெற்காசிய சிரேஸ்ட தடகள சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை 16 தங்கப்பதக்கங்கள் அடங்களாக 40 பக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப் தனதாக்கியது.

பல போட்டிகளில் இந்தியாவுடன் போட்டியிட்ட இலங்கை, பதக்கப் பட்டியலில் 4 தங்கப் பதக்கங்கள் வித்தியாசத்தில் முதலாம் இடத்தை இழந்தது.

இலங்கை 16 தங்கம், 14 வெள்ளி மற்றும் 10 வெண்கலத்துடன் 40 பதக்கங்களை வென்றது.

20 தங்கப் பதக்கங்களை வென்ற இந்தியா, பதக்கப் பட்டியலில் முன்னிலை பெற்றதுடன், 20 வெள்ளி மற்றும் 18 வெண்கலப் பதக்கங்களையும் வென்று மொத்தமாக 58 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இருப்பினும், இலங்கை மற்றும் இந்தியாவைத் தவிர, வேறு எந்த நாடும் தங்கப் பதக்கத்தை வெல்லவில்லை.

குறிப்பாக, 02 வெள்ளிப் பதக்கங்களை வென்ற நேபாளத்தைத் தவிர, வேறு எந்த நாடும் வெள்ளிப் பதக்கத்தை ஏனும் வெல்லவில்லை.

பங்களாதேஷ் 3 வெண்கலப் பதக்கங்களையும், மாலைத்தீவு 1 வெண்கலப் பதக்கத்தையும் வென்ற போதும், பூட்டான் ஒரு பதக்கத்தையும் வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 60 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.



போட்டியை நடத்திய இந்தியா மற்றும் இலங்கையைத் தவிர, பூட்டான், நேபாளம், மாலைத்தீவு மற்றும் பங்களாதேஷை பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு வீரர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

மேலும் 4ஆவது தெற்காசிய தடகள சம்பியன்ஷிப் போட்டியில், இலங்கையின் ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்கவுக்கு சிறந்த ஆண் தடகள வீரருக்கான விருது வழங்கப்பட்டது.

நேற்று (26) நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் ருமேஷ் தரங்க தங்கப் பதக்கம் வென்றார்.

அவர் 84.29 மீட்டர் தூரம் எறிந்து இந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 20 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணம்: சம்பியன் மகுடம் வென்றது மொரோக்கோ



பலமிக்க நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினாவை 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தீர்க்கமான இறுதிப் போட்டியில் அதிரடியாக வீழ்த்தி, பிபா 20 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தை முதல் முறையாக மொரோக்கோ அணி வெற்றி கொண்டதுடன், 16 ஆண்டுகளுக்கு முன்னர் கானா அணி சம்பியனானதன் பின்னர் மீண்டும் ஒரு ஆப்ரிக்க நாடு கைப்பற்றியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

19ஆவது 20 வயதிற்குட்பட்ட உதைப் பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் இம்முறை சிலியில் கடந்த செப்டம்பர் 27ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 19ஆம் திகதி வரை இடம்பெற்று வந்து.

இதில் உலகின் முன்னணி 24 அணிகள் பங்கேற்றிருக்க முதல் சுற்று லீக் முறையில் இடம்பெற்றது.

இதில் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 6 குழுக்களாக 24 அணிகளும் பிரிக்கப்பட்டு ஒரு அணி மற்றைய 3 அணிகளுடன் தலா ஒரு போட்டியில் மோதின.

பின்னர் விலகல் முறை சுப்பர் 16 சுற்று இடம்பெற்று காலிறுதிக்கு 8 அணிகள் தகுதி பெற்றிருந்தன. அதற்கமைய காலிறுதிப் போட்டிகள் முடிவில் முதல் அரையிறுதியில் மொரோக்கோ அணி பிரான்ஸ் அணியை எதிர்த்தாடியது. இதில் போட்டியின் முழு நேர ஆட்ட முடிவில் போட்டி 1:1 என சமன்பெற, பெனால்டி முறையில் 5:4 என மொரோக்கோ அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜென்டினா அணி 1:0 என்ற கோல் கணக்கில் கொலம்பியா அணியை வீழ்த்தி 5 ஆவது உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளும் கனவுடன் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இந்நிலையில் சிலியின் சாண்டியாகோவில் உள்ள ஜுலியோ மர்டீனஸ் ப்ராடனோஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினாவை மொரோக்கோ அணி எதிர்த்தாடியது. விறுவிறுப்பிற்குப் பஞ்சமில்லாத ஆரம்பித்த போட்டியின் முதல் பாதியின் 12 மற்றும் 29 ஆவது நிமிடங்களில் ஸபரி இரு கொல்களை தொடராக உட்செலுத்த முதல் பாதியின் முன்னிலையுடன் 2:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்ற மொரோக்கோ அணி முதல் முறையாக 20 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டு அசத்தியது.

இரு கோல்களை அடித்து வெற்றிக்கு வித்திட்ட ஸபரிக்கு போட்டியின் சிறந்த வீரர் விருது வழங்கப்பட்டது. மேலும் ஸபிரி, இப் போட்டித் தொடர் முழுவதும் 5 கோல்களுடன் “Golden Boot” விருதையும் வென்றார்.

மேலும் மொரோக்கோ அணியின் மத்திய வீரரான ஒத்மான் மாமேன் போட்டித் தொடரின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டு “Golden Ball” விருதையும் பெற்றார்.




# லங்கா பிரீமியர் லீக் தொடர் இந்த ஆண்டு இல்லை

## இலங்கை கிரிக்கெட் சபை அதிரடி

இந்த ஆண்டு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த லங்கா பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடர் நடைபெறாது என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்தியாவுடன் இணைந்து இலங்கை நடத்தும் ஐ.சி.சி ஆண்கள் ரி20 உலகக் கிண்ண தொடரின் ஒரு பகுதியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் முழுமையாக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை கவனமாக பரிசீலித்து, அனைத்து மைதானங்களும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தரநிலைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்வதன் மூலம், ஒரு பெரிய உலகளாவிய நிகழ்வை நடத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் வழிகாட்டுதல்களின்படி, உலகக் கிண்ண தொடரில் 20 அணிகள் பங்கேற்கும் போட்டிக்கான அனைத்து இடங்களும் அளவு மற்றும் தேவைகளைக் கையாள சரியான நிலையில் இருக்க வேண்டும்.

இதன்காரணமாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடப்பு ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் ரி20 தொடரை மிகவும் பொருத்தமான நேரத்திற்கு மாற்ற முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து வரும் புதுப்பித்தல் திட்டத்தில் பார்வையாளர் அரங்குகள், வீரர்களின் வசதிகள், பயிற்சிப் பகுதிகள், ஒளிபரப்பு உள்கட்டமைப்பு, ஊடக மையங்கள் மற்றும் முக்கிய சர்வதேச இடங்களில் உள்ள பிற அத்தியாவசிய வசதிகள் ஆகியவற்றில் பெரிய அளவிலான மேம்பாடுகள் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹொங்கொங் சிக்ஸஸ் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

ஹொங்கொங் சிக்ஸஸ் கிரிக்கெட் தொடருக்கான லஹிரு மதுஷங்க தலைமையிலான இலங்கை கிரிகெட் அணி கடந்த புதன்கிழமை இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பௌண்ரிகள் வெளுத்துக் கட்டப்படும் ஹொங்கொங் சிக்ஸஸ் திருவிழாவிற்கான 08 பேர் கொண்ட அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, லஹிரு மதுஷங்க (தலைவர்), தனஞ்சய லக்ஷன், தனுக தாபரே , நிமேஷ் விமுக்தி,லஹிரு சமரகோன்,தரிந்து ரத்நாயக்க, சச்சித ஜயதிலக, மோவின் சுபசிங்க ஆகியோர் அணியில் அடங்குகின்றனர்.




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.